Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (14 6-66) இதழ் 127

பராபவ வைகாசி 32 ஸபர் 24 செவ்வாய்க்கிழமை

## கடற்கோட்டை தூணிலுள்ள தமிழ் கல்வெட்டு பற்றி ஆராய்ச்சி

யாழ்ப்மாணம், செவ். ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலுள்ள ஒரு கற்றூணில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு பத்து அல்லது பன்னிரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. பதினைந்தாம் நூற்றுண்டின் பின்னரே இக்கோட்டை கட்டப்பட்டதாதலால் முன்னிருந்த கட்டிடம் ஒன்றிலிருந்த கற்கள் இக்கோட்டையைக் கட்ட அமைக்கப்பட்டிருக்கலாமென்றும் கருதப்படுகிறது. இக்கல்வெட்டு பற்றி ஆராய்வதற்கு விரைவில் ஒருவரை அனுப்புவதாக புதைபொருளாராய்ச்சிக் கமிஷனர் திரு கொடகும்புர நேற்றுத் தெரிவித்தார்.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்டு 'பிரமி' எழுத்துக்களையுடைய கல்வெட்டு ஒன்று யாழ்ப்பாணம் நூதனசாலையில் முதல் நூற்றுண்டைச் சேர்ந்தது என்ற குறிப்புடன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதிலுள்ள எழுத்துக்கள் அழிந்து சிதைந்துள்ளன. "இது கல்வெட்டே அல்ல" என்று கமிஷனர் கொடகும்புரா கூறியிருக்கிறார்.

# அரசாங்கத்தின் புதிய விவசாய திட்டங்கள்

## 1970-ல் நெல் உற்பத்தி 2 கோடி புசலாக அதிகரிக்கும்

கொழும்பு, திங்கள்

**தேசிய அரசாங்கத்தின் புதிய விவசாயத் திட்டங்களின்படி, 1970ம் ஆண்டில் நாட்டின் நெல் உற்பத்தி, இரண்டுகோடி புசலினுல் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.**

விவசாயத்துறையில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித்திட்டங்களினுல் நாட்டின் நெல் உற்பத்தி பெருமளவில் அதிகரிக்கும் சாத்தியங்களிருப்பதாகக் கருதப்படுகிறது.

நெல் உற்பத்தியை அதிகரிக்கச்செய்வதில் செயற்கை பசளை முக்கிய பங்கெடுப்பதாகவும் விவசாயிகளும் இதனை ஏற்றுக்கொண்டு இப்பசளையை நன்ருகப் பயன்படுத்தி வருவதாகவும் விவசாய அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர்தெரிவித்தார்;

இத்திட்டத்தை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னுர்.

இப்பொழுது நாட்டில் 1,500 விவசாய டிராக்டர்கள் இருக்கின்றன. இவ்வாண்டில் 1,500 விவசாய டிராக்டர்கள் இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

# வேலைநிறுத்தம் ஆரம்பம்

## 2500 பேர் வேலைக்கு செல்லவில்லை

கொழும்பு, திங்கள்

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த 2500 தோட்டத் தொழிலாளர் இன்றுகாலை வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். தோட்டத் தொழிலாளருக்கும் 17 ரூபாய் 50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமெனக் கோரி இவர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இவ்வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லையாயினும் சிலதோட்டங்களில் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த தொழிலாளர் வேலைக்குச் செல்லாததைக் கண்ட இ. தொ. கா. தொழிலாளரும் வேலைக்குச் செல்லவில்லை.

தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென்ற விஷயமாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் இ. தொ. கா. பிரதிநிதிகள் தங்கள் பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமென ஓர் அறிக்கையில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வேலைநிறுத்தம் காரணமாக இதுவரை அசம்பாவித சம்பவம் எதுவும் நிகழவில்லை.

## துணி வகைகளும் விலைகளும்

கொழும்பு, திங்கள்

சேலை, சாரம் மற்றும் எந்தத் துணியினது அகலத்தையோ நீளத்தையோ மாற்றுவது குற்றமாகும். இப்புதிய உத்தரவு நேற்று வெளியான விசேஷ கஸட் அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தது.

துணிகளின் திருத்தியமைக்கப்பட்ட புதிய விலைகள் யார் ஒன்றுக்கு பின்வருமாறு:

செயற்கைப்பட்டு வகைகள் ரூ 2-92, சேலைகள் ரூ 2-65, சாரங்கள் ரூ 2-82, சற்றின், கிறின் வகைகள் ரூ 2-79, பிளானல், கபர்டின், கொட்ஜொய், பபிறிக் வகைகள் ரூ 2-82, மஸ்லின் ரூ 3-05, ரவெட்டா ரூ 3-23, 36'' மேற்படாத ரவெட்டா கிறின் வகைகள் ரூ 2-55, 36'' மேற்பட்ட ரவெட்டா வகைகள் ரூ 2-70, பருத்தி வகை துணிகள் ரூ 2-07, சேலைகள் ரூ 2-53, சாரங்கள் ரூ 2-21, லோங்குளோத் 48'' ரூ 1-96, ரிக்கிங்மல் ரூ 1-98, பப்ளின் கேம்பிறிக், சேட்டிங், வோயில், குடைத்துணி சற்றின் ரூ 2-12, ரகூர் வகைகள் ரூ 2-43, நுளம்புவலைகள் ரூ 2-23, கட்டுப்பாட்டு விலைக்குள் வராத சேலைகள், சாரங்கள் யார் ஒன்றுக்கு ரூ 1-96.

## ஜெனிவா ஒப்பந்தப்படி வியட்னும் தகராறை தீர்க்குக

### யுகோ அதிபர் - மன்னர் ஷாகூட்டறிக்கை

பெல்கிரேட், ஜூன் 13

வியட்னும் தகராற்றை 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தப்படி தீர்த்துவைக்க வேண்டுமென்று யுகோஸ்லேவிய அதிபர் டிட்டோவும் ஈரான் மன்னர் ஷாவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளனர்.

இங்கு விஜயம் செய்த ஈரான் மன்னர் ஷா, தமது எட்டுநாள் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு இன்று மொரோக்கோ பயணமானுர்.

யுகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுடன் மன்னர் ஷா நடத்திய பேச்சுக்களின் போது சர்வதேச பிரச்னைகள் இடம் பெற்றதென்றும் வியட்னும் தகராறு குறித்து இரு தலைவர்களும் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியதுடன் தகராறு தீர்க்கப்படாதது குறித்து கவலை தெரிவித்ததாகவும் செய்திகள்கூறுகின்றன.

வியட்னும் தகராற்றைத் தீர்த்து வைக்க, சம்பந்தப்பட்ட நாடுகள் முன்வரவேண்டுமென்று கோரிக்கை விடுத்த இரு தலைவர்களும், தென் கிழக்கு ஆசியாவில் நிலைமை முழு அளவில் மோசமாகுவதற்கு முன்னர் 1954-ம் ஆண்டு ஜெனிவாவில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கிணங்க தீர்வு காணவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## பெயர் மாற்ற கமிஷன்

யாழ்ப்பாணம், செவ்.

பெயர் மாற்ற கமிஷன் விசாரணை திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினம் தலைமையில், அரசாங்க செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சங்கானையில் உள்ள வடலியடைப்பை, தாளபுரம் என மாற்றும்படி கிராம முன்னேற்ற சங்கம் கேட்டுக் கொண்டது. வட்டுக்கோட்டையிலுள்ள இரத்தலடி என்ற இடத்தை சிவபுரம் என மாற்றும்படி டாக்டர் குமாரசாமி கேட்டுக் கொண்டார். பருத்தித்துறையில் உள்ள மந்திகை என்ற இடத்தை புலோலியுடன் சேர்த்து புலோலியென அப்பகுதியை பெயரிட வேண்டுமென் வி. ஆறுமுகம் தலைமையிலுள்ள தூதுகோஷ்டி கேட்டுக் கொண்டது.

விசாரணை மீண்டும் இன்று காலை ஆரம்பமாகும்.

## பொலநறுவை கட்டிப்பால் தொழிற்சாலை

### 67-ல் உற்பத்தி தொடங்கும்

பொலநறுவை, திங்கள்

பொலநறுவையில் இப்பொழுது நிறுவப்பட்டுவரும் அரசாங்க கட்டிப்பால் தொழிற்சாலை, அடுத்த வருடம் முற்பகுதியில் உற்பத்தி வேலையில் ஈடுபடத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தொழிற்சாலையின் கட்டிட வேலைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. அநேகமாக இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி பெறும் என்று நம்பப்படுகிறது.

மூலப் பொருள்கள் ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்படும் என்றும் பின்னர் படிப்படியாகக் குறைக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

கட்டிப்பால் தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபடும் நேரத்தில் வருடந்தோறும் முப்பது லட்சம் ரூத்தல் பட்டரையும் உற்பத்தி செய்யுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டிப்பால், பட்டர் ஆகியவற்றின் உற்பத்தி மூலம் வருடந்தோறும் ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபா வெளிச் செலாவணி மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மின்சார ரயில்கள் மோதல்: 52 பேர் மாண்டனர்!

பம்பாய், ஜூன் 13

பம்பாயில் இன்று காலை இரண்டு மின்சார ரயில்கள் மோதிக்கொண்டதில், ஐம்பத்தியிரண்டு பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

டாணு நோக்கிச் சென்று கொண்டிருந்த மின்சார ரயில் ஒன்று எதிரே வந்து கொண்டிருந்த மற்றுமொரு மின்சார ரயிலுடன் மோதிக்கொண்டதில் இக்கோர விபத்து நிகழ்ந்தது. இவ்விபத்து ரயில் கடவையொன்றில் ஏற்பட்டது.

ரயில் விபத்தினுல் முதலிரு ரயில் பெட்டிகளும் உருத் தெரியாமல் சுக்குநூருயின இப்பெட்டிகளில் பெண்களே அதிகமாகவிருந்தனர். ரயில்களின் சாரதிகளும் உயிர் தப்பியுள்ளனர்.

முதலில கிடைக்கப்பெற்றபொலிசாரின் அறிக்கையின்படி 100 பேர் மாண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்து நடைபெற்ற இடத்தை மந்திரி சவான், பம்பாய் மேயர், மகாராஷ்டிர முதலமைச்சர் ஆகியோர் நேரில் சென்று பார்த்தனர்.

## முதல் எதிரிக்கு 7 வருடம்; 3 எதிரிகள் விடுதலை

### வட்டுக்கோட்டை கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்

வட்டுக்கோட்டைக் கொலை வழக்கில் 1-ம் எதிரிக்குஏழு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மற்றும் மூன்று எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையா கியூ.சி. முன்னிலையில் மூன்ருவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

நீதியரசர் தமது உரையை முடித்தபின் ஜூரி சபையினர் தனிமையில் சந்தித்து மந்திராலோசனை செய்த பின் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். சடுதியாக ஏற்பட்ட சண்டை காரணமாக 1-ம் எதிரி கைமோசக் கொலைக் குற்றம் புரிந்ததாக ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர் 2-ம், 3-ம், 4-ம் எதிரிகள் எக்குற்றமும் செய்யவில்லை

(5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

பிரதி நிதிகள்

அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்குக் கல்வியறிவுடைய, தகுதி வாய்ந்த பிரதிநிதிகள் (ஏஜென்ட்) தேவை. பிணைப்பணம் ரூபா 100/- மாதச்சம்பளம் ரூபா 100- இக்குடாநாட்டுள் இருப்பவர்கள் 20-6-66 ம் திகதியுள் கௌரவ காரியதரிசிக்கு மனுப்பண்ணவும். மு. இராசரத்தினம், தலைவர், யாழ். விவாக அந்தியகால சேமலாபநிதிச் சங்கம், 11, ஜி. மொம்சாக் மாளிகை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 547

## சோதிடம்

ஆருடபலன் — 2-00, கைரேகை 2-00, கைரேகை, திரிகால பலன் — 5-00, ஜாதகம் பார்க்க — 5-00. எஸ். இராசரத்தினம் 105, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 546

## விற்பனைக்கு

பெற்றன் புத்தகம்

கைத்தறி சேலைகளுக்கு பூப்போடும் பெற்றன் புத்தகங்கள் எல்லா விலைகளிலும்கிடைக்கும். வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும், எஸ். சவிரிமுத்து, 73. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 548

கார்

CN ஏ போர்ட்டி கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 45, ஈச்சமட்டை வீதி, யாழ்ப்பாணம். 549

## வாடகைக்குத் தேவை

வீடு

வேம்படி மகளிர் பாடசாலைக்கு அண்மையில் அல்லது சின்னக்கடை, ஒட்டுமடம், ஐந்து முச்சந்தி, வண்ணார்பண்ணை, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் உடனே அறிவிக்கவும். திருமதி மேதர், ஆசிரியை, சித்தங்கேணி, 541

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Cornel Wilde
Jean Wallace
in
Sword of Lancelot
(Cinemascope – Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி - பத்மினி
நடித்த
மீண்ட சொர்க்கம்


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத் திருடன்

## உற்சவம் ஆரம்பம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பருளாய் ஈஸ்வர விநாயகர் கோவில் கொடியேற்றத்திருவிழா இன்று தொடக்கம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெறும். 24-6-66 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழா நடைபெற்று அடுத்ததினம் திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்

# தமிழ்மொழிச்சட்ட விதிகள் நடைமுறைக்கு வரும் விஷயம்

## தலைவர்களை மட்டும் நம்பியிருப்பதில் அர்த்தமில்லை என்கிறார் எம். பி.

கிளிநொச்சி, திங்கள்

''தமிழ் மொழிச்சட்ட விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் விஷயத்தால் தலைவர்களை மட்டும் நம்பியிருப்பதில் அர்த்தமில்லை. தமிழ் பேசும் மக்களும் இச் சட்டவிதிகளை நடைமுறைப் படுத்தும் நோக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்''

தமிழரசுக் கட்சி கிளிநொச்சி கிளையின் மாவட்ட சபை அமைப்புக் கூட்டத்தில் கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாது சொன்னார்.

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''மாவட்ட சபைகள் அமைப்பதன் மூலம் எமது அபிவிருத்தி வேலைகளையும் ஆக்க வேலைகளையும் நாமே செய்துகொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்மொழிச் சட்ட ஒழுங்கு விதிகள் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பது உண்மை. இவ் விஜயத்தில் தலைவர்களுக்கு உதவியாக இருந்து தமிழ் பேசும் மக்கள் உதவி செய்ய வேண்டும்.

பின்வருவோர் நடப்பு வருடநிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், காரியதரிசி வீ. பீ. பொன்னம்பலம், பொருளாளர் டாக்டர் சி. அம்பலவாணர். அறுவர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# ''அநீதிகளைஎதிர்க்கவிவசாயிகள் ஒன்று சேரவேண்டும்''

கிளிநொச்சி, திங்கள்

''உழைத்த உழைப்பினைக் கூட அனுபவிக்கமுடியாத அப்பாவி விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு அவர்கள் ஒன்றுசேரவேண்டும். சங்கமொன்றின் மூலம் ஒன்று திரண்டு உரிமைக்காக அயராது போராட வேண்டும்''

உருத்திரபுரம் விவசாயிகள் மத்தியில் அகில இலங்கைவிவசாயிகள் சம்மேளனப் பொதுக்காரியதரிசி திரு. டி. பி. பெரேரா பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

உருத்திரபுரம் விவசாயிகள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த கூட்டத்தில் திரு. பெரேரா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கையின் ஜனத்தொகையில் 65 சத வீதத்தினர் விவசாயிகள். இந்த 65 சத வீதத்தினரும் 45 கோடி ரூபா பெறுமதியான அரிசியை உற்பத்தி செய்து இந்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியில் 45 கோடி ரூபாவை மிச்சப்படுத்துகிறார்கள். இந்த நெல்லை நமது விவசாயிகள் உற்பத்தி செய்யாது விட்டால் நமது அரசாங்கம் வெளிநாட்டிலிருந்தே முழு அரிசியையும் இறக்குமதிசெய்ய நேரிடும். ஆனல் இப்படியாக நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும் விவசாயிகளை யாருமே கணக்கெடுப்பதில்லை. இதற்கு ஒரேயொரு வழி விவசாயிகள் ஒன்று சேர்ந்து போராடுவதுதான்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நெல்லுக் கொடுத்து பணம் வாங்காத உருத்திரபுரம் விவசாயிகள் பிரச்னை சம்பந்தமாக எமது சம்மேளனம் நடவடிக்கை எடுத்து பணத்தை பெற்றுக் கொடுக்க முயற்சிசெய்யும்.

உருத்திரபுரம் விவசாயிகள் சங்க காரியதரிசி திரு. வீ. வை. தியாகராசா பேசுகையில், பல துறைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் சங்கம் அமைத்து அதன் மூலம் போராடி வருகிறார்களென்றும், விவசாயிகளுக்கு இதுவரை காலமும் எதுவித சங்கமும் இருக்கவில்லையென்றும், இப்போது இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள விவசாயிகள் சங்கத்தால் விவசாயிகளுக்கு கட்டாயம் நன்மை கிடைக்குமென்றும் சொன்னார்.

உருத்திரபுரம் விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. இ. ஐயாத்துரை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி நலனைக் கவனிக்க சபை

## கொழும்பில் அங்குரார்ப்பணம்

பம்பலப்பிட்டி, திங்.

தமிழ் மாணவர்களின் நலனைக் கவனிக்கும்பொருட்டு தமிழர் கல்வி நலன்சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தமிழரின் கல்வி நலனில் அக்கறை கொண்டுள்ள பிரமுகர்கள் பலர் சேர்ந்து அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒரு கூட்டத்தை நடத்தினர். இக் கூட்டத்துக்கு முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. ஏ. ஜே. ஆர். வேதவனம் தலைமை வகித்தார்.

தமிழ்ப் பிள்ளைகளுக்குள்ள கஷ்டங்கள் குறித்தும், திரு. நடேசன் கமிட்டி பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கை பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. தமிழ்ப் பிள்ளைகளின் நலனைக் கவனிக்க நிரந்தரமான சபை ஒன்று நிறுவப்படவேண்டிய அவசியம் பற்றிக் கூட்டத்தில் பேசிய பலரும் வலியுறுத்தினர். தமிழ்ப் பிள்ளைகளின் நலன்கருதி தானும் தனது சகாக்களும் செய்த தொண்டுகள் குறித்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூட்டத்தில் விளக்கினர். தமது கமிட்டி பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கை குறித்து திரு. எஸ். நடேசன் கியு. ஸி. விளக்கம் தெரிவித்து நிரந்தரமான கல்வி நலன்சபை ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதை ஆமோதித்தார்.

புதிய சபைக்கான சட்டவிதிகள் தயாரிக்கப்பட்டு ஆலோசனையின் பின்னர் நிறைவேற்றபட்டது. சபையின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்தை ஜூலை மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. சபையின் இடைக்காலத் தலைவராக திரு. ஏ. ஜே. ஆர். வேதவனமும், இடைக்கால காரியதரிசியாக திரு. எஸ். சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர்.

# விளம்பரம்

## தமிழ் நாடகக் குழு

இலங்கைக் கலைக் கழகம்
நாடக எழுத்துப் போட்டி 1966
(ஓரங்க நாடகங்களும்
பொது நாடகங்களும்)
இறுதித் திகதி
15–9–66
விபரங்களுக்கு:
செயலாளர்,
இலங்கைக்
கலைக் கழகம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு—7.
என்ற முகவரிக்கு
எழுதவும். 478

## அறிவித்தல்

28-6-1966, செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரை கோப்பாய் கிராம சபைத்தலைவரால் கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயில் ரோட்டு வேலைக்கு ''சீல்'' வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இச்சபையினுல் அங்கீகரிக்கப்பட்ட ரூ. 5000/-க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் 26-6-1966 நண்பகல் 12 மணி வரைக்கும் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரப் பணமாக ரூ. 5/-ம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 20/-ம் செலுத்திய பின்னரேகேள்விப்பத்திரம்வழங்கப்படும் கேள்விப்பத்திரப் பணம் ரூ. 5/-ம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. மேற் கொண்ட விபரங்களெதுவும் அறிய விரும்பின் அலுவலகநேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

கே. வி. எஸ். சண்முகநாதன்
தலைவர்,
கிராமசபை—கோப்பாய்.

கிராமசபை அலுவலகம்,
கோப்பாய். 11-6-1966.
496

## சுகாதாரவார கருத்தரங்கம்

காரைநகர், திங்கள்

அகில இலங்கைச் சுகாதார வாரத்தினையொட்டி காரைநகர் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் 'குடும்பநலத்திட்டமும் உடல் ஆரோக்கியமும்' என்னும் பொருள்பற்றி கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் வைத்தியகலாநிதி எஸ். சின்னத்தம்பி, மானிப்பாய் மேற்பார்வைச் சுகாதரரப் பரிசோதகர் ஈ. ஆர். போல் ஆகியோர் கலந்துகொண்டனர். காரைநகர் சுகாதாரப் பரிசோதகர் திரு. து. மகாதேவன் இக்கருத்தரங்கத்தை ஒழுங்கு செய்தார்.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பஜாரில் மூன்று கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## அப்படி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற மலேசிய சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து சுஹார்ட்டோ புட்டோ சந்திப்பு இரண்டுமணிநேரம் தாமதித்தது. (பி.டி.ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவதாக ரஷ்யா சம்மதிக்கவில்லை

## பாக். பத்திரிகை செய்திகளுக்கு மாஸ்கோ வட்டாரங்கள் மறுப்பு

மாஸ்கோ, ஜூன் 13

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு சோவியத் யூனியன் இணக்கம் தெரிவித்திருப்பதாக வெளியான செய்திகளை மாஸ்கோ வட்டாரங்கள் திட்டவட்டமாக மறுத்துள்ளன.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய ரஷ்யா சம்மதித்திருக்கிறதென்றும் போதுமான ஆயுதங்களையும் ராணுவ தளபாடங்களையும் ரஷ்யாவிடமிருந்து பாகிஸ்தான் இனிமேல் வாங்கிக்கொள்ளுமென்றும் பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தன.

பாகிஸ்தான் பத்திரிகைச் செய்திகளில் சிறிதளவும் உண்மை கிடையாதென்றும் இவை ஆதாரமற்றவை என்றும் மாஸ்கோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுதங்களை விற்குமாம்

#### பாக். பத்திரிகை வெளியிட்ட தகவல்

கராச்சி, ஜூன் 13

இந்தியாவுக்குள்ள அதே நிபந்தனைகள், வட்டி அடிப்படையில், பாகிஸ்தானுக்கும் ஆயுதங்களை விற்பனை செய்ய சோவியத் யூனியன் விரும்புவதாக கராச்சி பத்திரிகை 'டான்' கூறுகிறது.

ராஜதந்திர வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்ததாக 'டான்' கூறியது.

அயூபின் முஸ்லிம் லீக்கட்சியுடன் நெருங்கிய தொடர்புடைய 'டான்' பத்திரிகை ரஷ்ய ஆயுதங்களுக்கு பாகிஸ்தான் விரைவில் ஆர்டர் கொடுக்கும் எனக் கூறியது.

பாகிஸ்தான் சோவியத்திடமிருந்து வாங்கிய எண்ணெய் தோண்டும் கருவிகளுக்கு வட்டி இரண்டரை சதவிகிதம், இதேவிகிதத்தில் ஆயுதங்களையும் அது வாங்குமாம்.

கிழக்குப் பாகிஸ்தானில்

### சுயாட்சி கோரிக்கையை தீவிரப்படுத்தத் திட்டம்

#### 'மந்திரிசபை' யொன்றையும் எதிர்க்கட்சியினர் நிறுவினராம்

டாக்கா, ஜூன் 13

தங்களது மாகாண சுயாட்சிக் கோரிக்கையைத் தீவிரத்படுத்த கிழக்குப் பாகிஸ்தான் எதிர்க் கட்சியினர் ஆறம்சத்திட்டமொன்றைத்தயாரித்துள்ளனர்

நேற்று இங்குநடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டமொன்றில் இந்தத்திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கூட்டத்துக்கு அவாமிலீக் தலைவர் தலைமை வகித்தார்.

தங்களது கிளர்ச்சியைத் தீவிரமாக்குவதென்றும் தீர்மானித்த இவர்கள் இதற்காக ஒரு ''மந்திரிசபை'' யொன்றை அமைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் கிழக்குப் பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் வேலை நிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 6, 9-ம் திகதிகளில் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக 30,000 தொழிலாளர்களை ஆட்சியினர் கைதுசெய்துவிட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கிழக்குப் பாகிஸ்தானில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட மேலதிக இராணுவத்தை அரசாங்கம் அனுப்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 60 பேர் பலி

லண்டன், ஜூன் 13

வெள்ளப்பெருக்கு காரணமாக ஹாங்கொக்கில் 60 பேர் பலியானுர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானவர்கள் வீடு இழந்தனர்.

### உறவு நிலை மோசம்

பீகிங், ஜூன் 13

சீன - கென்யா உறவுகள் மோசமடைந்திருப்பதாக அறிவித்துள்ளது.

கென்யா அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சீனு முயற்சி மேற்கொண்டதாக கென்யா குற்றம் சுமத்தியுள்ளது.

### சுகாதார விழா

சுழிபுரம், திங்கள்

பண்டத்தரிப்பு கிராம சபைத்தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமையில் சுகாதார விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற விழாவில் பலர் பேசினர். சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக நாடகங்கள் நடித்துக்காண்பிக்கப்பட்டன. சுகாதாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### தென் கொரிய விஜயத்தை பிரதமர் கீ ரத்துச்செய்தார்

#### ஹியூவில் தொடர்ந்து நெருக்கடி

சைகோன், ஜூன் 13

தென்வியட்னும் நகர் ஹியூவில் மேலும் பல அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இன்று தென் கொரியாவுக்குப் புறப்படவிருந்த தென்வியட்னும் பிரதமர் ஏர் வைஸ் மார்ஷல் கீ தமது விஜயத்தைச் ரத்துச்செய்துவிட்டார்.

செப்டம்பர் மாதம் பதினுரும் திகதி தென்வியட்னுமில் பொதுத்தேர்தல் நடத்துவதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும் பொருட்டும் தமது தென்கொரிய விஜயத்தை பிரதமர் கீரத்துச் செய்திருக்கலாமென்று கூறப்படுகிறது.

இதற்கிடையே தென்வியட்னும் ஆட்சியை ஆதரித்து ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் நேற்றுஇங்கு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதே நேரத்தில் பௌத்த மக்கள் அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய பொழுதிலும் இரு சாராருக்குமிடையே 'மோதல்' ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

### ''மலேஸியாவுடன் உறவுஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சிக்கிறது''

#### ஜாகர்த்தாவில் புட்டோ தகவல்

ஜாகர்த்தா, ஜூன் 13

இந்திய—பாகிஸ்தான் சண்டையின் போது துண்டிக்கப்பட்ட மலேசியாவுடனுன உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதில் பாகிஸ்தான் ஈடுபட்டிருக்கிறது என்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ இங்கு தெரிவித்துள்ளார்.

இங்கு வந்திருந்த திரு. புட்டோ, இந்தோனேஷிய நிர்வாகத் தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோவுடன் நேற்று முன்தினம் 40 நிமிட நேரம் பேச்சுக்கள் நடத்தினுர்.

மலேசியவெளிநாட்டு காரியாலய நிரந்தரக்காரியதரிசி திரு. ரன்சிறி கஸாலி ஷாபிக்கும் ஜெனரல் சுஹர்ட்டோவுக்குமிடையே

(2-ம் பக்கம் பார்க்க)

### அப்படி யொன்றும் நடக்கவில்லை என்கிறுர் மலேஸிய அதிகாரி

கோலாலம்பூர், ஜூன் 13

மலேசியாவுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள பாகிஸ்தான் முயற்சித்து வருவதாக திரு. புட்டோ தெரிவித்த கருத்தை மலேசிய வெளிநாட்டு விவகார அதிகாரியொருவர் மறுத்துள்ளார்.

(இந்தியா- பாகிஸ்தான் சண்டையின்போது, இந்தியாவை ஆதரித்ததாக மலேசியா மீது குற்றம் சாட்டி மலேசியாவுடனுன ராஜிய உறவுகளை பாகிஸ்தான் முறித்திருந்தது.)

மலேசியா வெளிநாட்டு விவகார சிரேஷ்ட பேச்சாளரான திரு. அகமட் நோரிடின் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில், தமது நாட்டுடன் மீண்டும் ராஜிய உறவுகளை ஏற்படுத்த பாகிஸ்தான் விரும்புவதை மலேசியா பெரிதும் வரவேற்கிறதென்றும் உறவுகளை அவர்களே முறித்துக்கொண்டதால் மீண்டும் புதுப்பிப்பது அவர்களிடம்தான் தங்கியுள்ளதென்றும் கூறினுர்.

(பி. டி. ஸி.)

### ''நெருக்கடியைத் தணிக்கவே 'ரூபா மதிப்பு குறைப்பு''

#### பிரதமர் இந்திரா விளக்கம்

புதுடில்லி, ஜூன் 13

நாட்டின் பொருளாதார. நெருக்கடியைக் குறைத்து அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவே ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை அரசாங்கம் மிகவும் நுணுக்கமாக அலசி ஆராய்ந்தபின்னரே அமுலுக்குக் கொண்டு வந்தது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு வானெலிமூலம் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவசியமாக பொருள்கள் மக்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் கூறினுர்.

''நாட்டின் நெருக்கடியான காலத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்நடவடிக்கைகளை சிலர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். இப்படியான சமூகவிரோத சக்திகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று நான் எச்சரிக்கை செய்கின்றேன். இதற்காக சட்டத்தைத் திருத்தவும் அரசாங்கம் தயங்காது. ரூபா மதிப்புக் குறைப்பினுல் விலைகள் உயர வேண்டிய அவசியமில்லை. இந்த நடவடிக்கைகளின்மூலம் அடுத்த பத்து வருடகாலத்துக்குள் வெளிச்செலாவணிச் சம்பாதிப்பை மூன்றுமடங்காக உயர்த்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்'' என்றும் பிரதமர் இந்திரா காந்தி கூறினுர்.

### இந்தோ—பாக். உறவுபற்றி புட்டோ

ஜாகர்த்தா, ஜூன் 13

இந்தோனேஷிய—பாகிஸ்தான் உறவுகளில் எக்காரணம் கொண்டும் மாற்றங்கள் நிகழாது என்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ இங்கு தெரிவித்துள்ளார்.

தமது விஜயத்தின் மூலம் இரு நாட்டு உறவுகளும் மேலும் வலுவடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

திரு. புட்டோ இன்று இங்கிருந்து தாய்லாந்து [illegible] பட்டார்.

### பெரு வெள்ளம்: அஸாம் துண்டிப்பு

#### ஒரு கிராமம் நீரில் மூழ்கியது; 90,000 மக்கள் பாதிப்பு

ஷில்லாங், ஜூன் 13

கடும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக அஸாம் ராஜ்யம் நேற்று மற்றையப்பகுதிகளுடன் முற்றிலும் தொடர்பிழந்தது. வெள்ளக் கொடுமை காரணமாக 90,000 மக்கள் இங்கு பாதிக்கப்பட்டுள்ளனர். அஸாம் இன்றும் வெள்ளத்தினுல் சூழப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகப் பெய்யும் கடும் மழைகாரணமாக பிரமபுத்திரா நதியின் நீர்மட்டம்அதிகரித்ததுடன் கிளை நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுப்பல அணைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

அஸாம் ராஜ்யத்தின் [illegible] வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாக உத்தியோக பூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன. மற்றுமொரு அகதிகள் முகாம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாகக் கடைசியாக வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

கடுமையான வெள்ளம் காரணமாக ரயில் போக்குவரத்துகள் யாவும் தடை செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. விமானச்சேவைகளை ரத்துச் செய்து விட்டதாக இந்திய ஏர்லைன்ஸ் விமானக் கம்பெனி அறிவித்துள்ளது.

அஸாம் ராஜ்யத்தில் மீண்டும் சகஜ நிலை ஏற்படுத்துவதற்கு இரண்டுவார காலம் பிடிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனத்தை அடக்கி வெற்றி கொள்ள முழுமனதோடு ஒருவன் விரும்புவானாகில், சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக் கடவன். படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண்கூட்டாகக் காணுவான்.

— யோகசுவாமிகள்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பராபவ ஆ வைகாசி 32 (14-6-66)

## யாழ்ப்பாண நகர புனரமைப்பு

யாழ்ப்பாண பஸ் நிலையம், வீதிகள் சீரமைப்பு, தண்ணீர் விநியோகத்திலுள்ள குறைபாடுகள் ஆகியவை சம்பந்தமாக யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ள விசேஷ மூவர் கமிஷன் ஆராய்ந்து இவை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பது யாழ்ப்பாண மக்களுக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையுமளிப்பதாகும்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை நேரில் பார்வையிட்ட மூன்று கமிஷனர்களும் பஸ் நிலையத்தை மாற்ற வேண்டியது அவசியமென்பதை உணர்ந்து பஸ் நிலையத்தை மின்சார நிலையத்துக்கு மேற்குப் புறமாக உள்ள பழையஇடத்துக்கு தற்காலிகமாக மாற்றுவதெனத் தீர்மானித்துள்ளனர். நிரந்தரமான ஒரு பஸ்நிலையம் வசதியான ஓர் இடத்தில் அமைக்கப்பட வேண்டும். அதுவரை இப்பொழுதுள்ள பஸ் நிலையத்தை உபயோகிக்கமுடியாது. எனவே தற்காலிகமாக இந்த நிலையத்தை மாற்றி ஓரளவாவது பிரயாணிகளுக்கு வசதியளிக்க வேண்டியது அவசியம். யாழ்ப்பாண வீதிகளின் அவலநிலையும், 'மின்மினி'ப் பூச்சி விளையாட்டு விளையாடும் மின்சார விநியோகமுறையும் தண்ணீர் விநியோக ஒழுங்கற்ற முறையும் சீர்திருத்தப்பட வேண்டிய அவசியத் தேவைகள். சந்தையும் திருத்தியமைக்கப்பட வேண்டும். அல்லது புதிதாகநவீன முறையில் கட்டப்பட வேண்டும். இவைகள் இதுவரை நிறைவேற்றப்படாமைக்கு வேறு பல காரணங்களிருப்பினும் பொருளாதாரத் தட்டுப்பாடு முக்கிய காரணமாகும்.

இன்று யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகப் பொறுப்பு விசேஷ மூவர் கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் அதன் நிர்வாகக் கட்டுப்பாடு அரசாங்கத்திடமே உள்ளது. எனவே யாழ்ப்பாண நகரின் சகல தேவைகளையும் நிவர்த்தி செய்து இலங்கையின் இரண்டாவது பெரியபட்டினமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தை சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த அழகுமிக்க நகரமாக விளங்கச் செய்ய ஸ்தலஸ்தாபன அமைச்சுக்கு இது நல்ல சந்தர்ப்பம். பல்வேறு அமைச்சுகளின் ஒத்துழைப்புடன் அரசாங்கத்திடமிருந்து நிதிஉதவியும் பெற்று யாழ்ப்பாண நகரத்தை புனரமைக்க வேண்டும். இதற்குப் பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும்.

## வேலைநிறுத்தம் விவேகமல்ல!

தோட்டத்தொழிலாளருக்கும் 17 ரூபாய் 50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்பட வேண்டுமெனக்கோரி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று முதல் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளது.

பாண்பேக்கரி ஊழியருக்கும் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளருக்கும் அரசாங்க ஊழியருக்கும் இந்த விசேஷ பஞ்சப்படி வழங்கப்படுகையில் நாட்டின் பொருளாதாரத்துக்கு மூலகாரணமாக விளங்கும் தோட்டத் தொழிலாளருக்கும் 17-50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தவறானதல்ல. ஆனால் நியாயமான கோரிக்கையாக இருந்தாலும் தொழிலாளரின்ஒற்றுமையினால் தான் அதைப் பெறமுடியுமே தவிர வேறுபட்டு நிற்பதனால் பெறமுடியாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரே தொழிற் சங்கம் இல்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் கழகம், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என பல்வேறு தொழிற் சங்கங்கள் உள்ளன. ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்துள்ள இந்த வேலை நிறுத்தத்துக்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், தோட்ட உத்தியோகத்தர்கள் சங்கம், வங்கி ஊழியர்சங்கம் ஆகியவை ஆதரவளித்துள்ளன. தோட்டத் தொழிலாளர் அங்கம் வகிக்கும் இதர தொழிற் சங்கங்கள் இன்னும் இதற்கு ஆதரவளிக்கவில்லை. தோட்டத் தொழிலாளரின் மற்றொரு முக்கிய தொழிற் சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விசேஷ பஞ்சப்படிக்குப் பதிலாக தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டுமென தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை இல்லாதிருக்கும் இச் சமயத்தில் வேலைநிறுத்தம் ஆரம்பித்திருப்பது தொழிற் சங்கப் போட்டி காரணமாக தொழிலாளருக்கிடையில் வேற்றுமையை அதிகரிக்கவும் கோரிக்கை நிறைவேறாததுடன் உள்ள உரிமைகளையே இழந்துவிடவும் வழிவகுக்கக் கூடும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்திய வம்சாவழியினரில் ஒரு பகுதியினரை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கும் இச்சமயத்தில் தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வது நாட்டுக்கு வேண்டியவர் வேண்டாதவர் என பகுத்து வேலைநிறுத்தம் செய்பவரை வேண்டாதவர் எனக் கவனித்து வெளியேற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தக் கூடும். எனவே தொழிலாளர் மத்தியில் விசேஷ பஞ்சப்படிக் கோரிக்கைக்கு ஒற்றுமையை உருவாக்கும் வரை, இந்த வேலை நிறுத்தத்தை ஓர் அடையாள வேலைநிறுத்தமாகக் கருதி விரைவில் முடிவுக்குக் [illegible]

## 'தமிழ்க் கடல்' கந்த முருகேசனார்

—செல்வி பொன்னம்மா கணபதிப்பிள்ளை—

சென்றவாண்டு ஆனித்திங்களில் இறைமையெய்திய தமிழ்ப்பேரறிஞர் கந்தமுருகேசனார் அவர்கள், ''தமிழ்த் தாத்தா'' ''தமிழிலக்கியப் பரப்பின்பொலிவு'', ''புரட்சிச் சிந்தனையாளன்'', -'புலவர்திலகம்'' என்றெல்லாம் அறிஞர்களால் போற்றப்பட்டவர்- இத்தனைக்கும் அப்பால் அவரைத் ''தமிழ்க் கடல்'' என்றும் போற்றப்பட்டார், அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்புப் பட்டங்களுள் ''தமிழ்க்கடல்'' என்பதே மிகமிகப் பொருத்தம் என்பது எனது எண்ணம். காரணம் தமிழறிவில் அவர் ஆழ்ந்து அகன்றகடல்போல் பரந்தவர். கந்தமுருகேசனார் அறிஞனாகமட்டும்வாழவில்லை. அவர் எல்லோருக்கும் அன்பனாக இனியனாக வாழ்ந்தார். அவர் வாழ்ந்த இல்லமும் தமிழகமே, இன்றும் அவர் தமிழுள்ளங்களில் வாழுகின்றார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் நால்வர் கந்தமுருகேசனாரைக் காணும் ஆவலினால் 'தமிழக' எல்லைக்குள் வந்து விட்டனர். ஒருவர் கந்தமுருகேசனாரை முன்பே அறிந்தவர். ஆகவே மற்றையமூவரும் விருந்தினர். எல்லையுட் சென்ற புதியவர்கள் திண்ணையில் இருந்த கந்தமுருகேசனாரின் தோற்றத்தைக்கண்டு திகைத்து நின்றனர். கிரேக்க ஞானி சோக்கிரதரோ. செந்தமிழ் முனிவர் பொதிகைமலை அகத்தியரோ இவ்விடம் காட்சியளிக்கின்றார் என்று அவர்கள்வாய் முணுமுணுத்தது. ஆம் அவரின் தோற்றம் அப்படியானதுதான். செக்கச்சிவந்த மேனி, தூய வெண்சடையும் தாடியும், பருத்தவயிறு, திரண்ட உடல், ஒளிகாலும்நீலமணிக் காந்தக்கண்கள்.

வந்தவர்கள்ஒருவாறுதிகைப்புநீங்கி முனிவர் தோற்றத்து முருகனாரை அணுகினர். வந்தவர்கள் யாவர் என்பதையறியு முன்பே, தமிழ்க்குரல் 'வாருங்கோ மேனை வாருங்கோ'' என்று அழைக்கிறது; அணைக்கிறது. திகைத்தவர்களுக்குப்புல்லரிக்கிறது. அன்பு குழைந்த அந்தக் குரலில், மகுடிவாய்ப் பாம்புபோல மயங்குகின்றனர். மீண்டும் ''இருங்கோ மேனைஇருங்கோ'' என்கிறது அந்தத்தேன்குரல் கை திண்ணையைக் காட்டுகிறது. வந்தவர்கள் அலர்கின்றனர். அன்பான கருத்துப் பரிமாறல் நடக்கிறது. அறிஞரின் நல்லியல்புகளை முன்பே அறிந்திருந்தும், பெரியவர், அறிஞர், எப்படி இருப்பாரோ, காரமாகத்தான் திமிருடன் கதைப்பாரோ என்று பயந்தபடி வந்தவர்கள் ஏமாந்தார்கள். நீண்ட நாட்பழகிய ஒருவருடன் — நெருங்கியஉறவினருடன் — இல்லை பெற்று வளர்த்து ஆளாக்கிய தந்தையுடனே கதைக்கிறோம் என்ற நிலைக்கு ஒன்றிவிட்டனர், வந்தவர்கள் அவருடைய அன்பு நெஞ்சமும் இனிய பேச்சும் அவர்கள் நிலையை மாற்றிவிட்டன. செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காத்திருக்கும் ''தமிழகத்தில்'' குளிர்பான நல்விருந்துஇடம் பெறுகிறது. கண்குளிர்ந்து நெஞ்சம் குளிர்ந்தவர்கள், வயிறும் குளிர்ந்து விடைபெறுகின்றனர், அவரை அறிஞனாகமாத்திரம்எண்ணி வந்தவர்கள் அவர் அன்பனாக, இனியனாகக் காட்டித் தந்ததைக்கண்டு மனநிறைவுடன் ஏகினர்

மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்போது மிகவும் அக்கறையுடன் கற்பிப்பார் கடமைக்காக மாத்திரம் கற்பிக்கமாட்டார். எம்மாசிரியர் தமிழ்வளர்ச்சிக்காகவும் கல்வி விருத்திக்காகவும், தமிழர் முன்னேற்றத்திற்காகவும் தொண்டு புரிந்தவர். அங்கே பணம் புரளவில்லை. அறிவும் அன்பும் பரிமாறப்பட்டன. மாணவர்கள்மேல் உரிமை பாராட்டினார். அவர்கள்மேல் கொண்ட பேரன்பினால் கண்டிக்கவும் செய்தார். அவரின் கண்டனவார்த்தைகள் காதால் கேட்க முடியாதன. ஆனால் அவற்றில அடித்தளம் நிறைவுபெற்ற அன்பு என்பதை எந்தப் பச்சைக்குழந்தையும் உணர்ந்துகொள்ளும்.

கற்பதில் கவனமில்லாத மாணவர்களுக்கு அவர் கொடுக்கும் தண்டனை ''கிள்ளு'' மாணவரின் விரலைப்பிடித்து, நகத்தில் அடியில், தம்கூரிய நகத்தால் பதம்பார்ப்பார். இந்தத் தண்டனைக்கு மழலைமொழிப் பாலன்தொடக்கம் பண்டித வித்துவான்வரை யாரும் விலக்கில்லை. அதனால் விரலில் புண்ஏற்பட்டு மாறாத சின்னமாகிவிடுவதுமுண்டு. தமிழ்ப்பேரரசர்கள், போர்களிலேற்பட்ட விழுப்புண்களை பெருமையுடன் நல்லணியாகப் போற்றுவது போல் கந்தமுருகேசனாரின் மாணவர்களும் தம்புண்களைப்பார்த்துப்பார்த்து, மகிழ்ந்துபேசிப்பேசி பெருமைப்படுவர். இம்மாணவர்கள்பல பாகங்களிலிருந்தும் ''தமிழகம்'' நோக்கி வந்தவண்ணம் இருந்தார்கள். வெறும் வெறும் அறிவு அவர்களை ஈர்க்கவில்லை. அறிவுடன் கலந்த அன்பும் பண்புமே மாணவர் குழாத்தை ஈர்த்தன. மகிழவைத்து அறிவைப் பெருக்கின

(5-ம் கலத் தொடர்ச்சி)

அவர் கேட்கவில்லை, இதற்கு இனி என்ன செய்வது?'' என்று கேட்டு ஒரு கடிதம் பெயர் விலாசத்துடன் எழுதியிருக்கிறார். அந்த ஆடவர் ஒரு கல்லூரி ஆசிரியரென்று பின்னர் தெரிய வந்ததாயும், ''ஒழுக்கத்தை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய ஓர் ஆசிரியரே இப்படி முறைதவறி நடப்பின் மாணவர் கதி என்ன ஆகும்'' என்று கேட்டு, ''சகோதரர்களே, எங்களை உங்கள் சகோதரிகளாக நினைத்து நிம்மதியாக நாங்கள் படம்பார்க்க விடுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்று வேண்டிக்கொண்டு அந்த ஆசிரியரின் பெயரையும் கல்லூரியின் பெயரையும் எழுதியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

சொல்லானைப் பொருளானைச் சுருதியானைச் சுடராழி நெடுமாலுக்கருள் செய்தானை, அல்லானைப் பகவானை அரியான் தன்னை அடியார்கட் கெளியானை அரண் மூன்றெய்த, வில்லானைச் சரம் விசயற் கருள்செய் தானை வெங்கதி ரோன் மாமுனிவர் விரும்பியேத்தும், நல்லானைத் தீயாடும் நம்பன் தன்னை நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுகிறது

''பீகிங்கில் 55 நாட்கள்'' என்ற ஓர் ஆங்கில சினிமாப் பட விளம்பரத்தைப் பார்த்தேன். பீகிங்குக்கு யாரோ நேரில் சென்ற 5 நாள் தங்கியிருந்து தமது அனுபவங்களை ''டாக்குமென்டரி''யாகக் காட்டுகிறார்களோ என்று தலைப்பைக் கண்டதும் நினைத்தேன்.

என்றுமில்லாதபடி ஓர் அன்பர் அன்று மாலை வந்து அதே படத்துக்குச் செல்லுவதாயும், என்னையும் வருமாறும் அழைத்தார். புது சீன தலைநகரான பீகிங்கை நாம் நேரில் பார்க்கமுடியுமா என்பது சந்தேகம் யாழ்ப்பாணத்துக்கே பீகிங் வந்திருப்பதால் அதைப் பார்க்கலாமென்று ஆவலுடன் சென்றேன்.

ஃ ஃ ஃ

ஆனால் அந்தப் படம் ஸ்பெயின் நாட்டில் பிடிக்கப்பட்டதாயும், சுமார் 60 வருடங்களுக்கு முன் சீனத்தின் 55 நாட்கள் நடைபெற்ற ''பாக்ஸர் கலக''த்தைப் பற்றியதென்றும் படம் காட்டுமுன் அறிவித்ததைக் கேட்டதும் ஏமாற்றமாக இருந்தது.

வெள்ளைக் காரர்களுக்கே சீனர்கள்போல் வேடம் போட்டிருந்தனர் காட்சிகளும் இயற்கையானதல்ல. சீனத்திலேஐரோப்பிய வல்லரசுகள்புகுந்து தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளமுயன்ற சமயம் அது. சீனர்கள் எதிர்த்துக் கலகம் செய்து, வெளியார்களை அநேகமாக முறியடித்த சமயத்தில், பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்த இந்திய துருப்புகள் வந்து குவிகின்றன. அவர்களைக்கண்டதும் வெள்ளையருக்கு குதூகலம். நிலைமைமாறிவிடுகிறது.

அச்சமயம் இந்தியா சுதந்திர நாடாக இருந்திருப்பின், இந்திய துருப்புகள் பீகிங் சென்றிருக்குமா?

அன்று இருந்த சீனம் இன்று எப்படி? பீகிங் மூன்றுவது அணுக்குண்டு வெடித்து ஒரு பெரிய வல்லரசாகியுள்ளது. பல நாடுகளும் புது சீனத்தைக்கண்டு அஞ்சுகின்றன. காலச் சக்கரத்தின் சுழற்சி வேகத்திலே எவ்வளவு மாறுதல்கள்! இன்னும் என்னென்ன நடக்கப் போகின்றனவோ! யார் கண்டார்கள்!

ஃ ஃ ஃ

படமாளிகை வாசலில் ஒருபுதிய அறிவித்தல் இருந்தது. மண்டபத்துக்குள் புகைக்கப் படாதென்றும், புகைப்பவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரிக்கை செய்திருந்தனர்.

ஆனால் உள்ளே பலரும் புகைத்து, மண்டபமனைத்தும் வழக்கம்போல் புகை மண்டலம் சூழ்ந்திருந்தது. யார்மீதும் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த எச்சரிக்கையை யாரும் மதிப்பதாகவும் தெரியவில்லை. மாநகரசபையின் புதிய கமிஷனர்கள் இது பற்றி சற்றே கவனம் திருப்புவது, பொதுமக்களுக்கும் சிறப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பெரிய நிவாரணமாக இருக்கும்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செல்வி தமிழ்ப் படம்பார்க்க குடும்பத்தாருடன் சென்றிருந்தாராம். படம் தொடங்கிய சிறிது நேரத்தின் பிறகு, பின் ஆசனத்திலிருந்த ஓர் ஆடவர், ''என் தங்கையின் முதுகை இரண்டு மூன்று தடவை சுரண்டினார். திரும்பி அவருக்குக் கூறியும

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை மாணவர் கல்வியை பாதிக்கிறது

## மாணவர்கள் எம். பி. யிடம் புகார்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் விலங்கியல், உயிரியல், முதலாய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர் திரு. வி. சோமசுந்தரம் இரண்டாம் தவணை தொடக்கம் பயிற்சி பெறுவதற்காக பலாலி ஆசிரிய கலாசாலைக்கு சென்றுள்ளார். இதன் காரணமாக இவருடைய இடத்துக்கு ஒருவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதனால்ஏச்.எஸ்.சி இறுதியாண்டு, முதலாண்டு ஜீ. சி. ஈ. வகுப்பு மாணவர்களுக்கு விலங்கியல், உயிரியல் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாததால் மாணவர்கள் வீணே பொழுது போக்கவேண்டியிருக்கிறது. இப்பாடசாலையில் கலை வகுப்புகள் குறைவாகவும், கலைப்பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர் கூடுதலாகவும் இருக்கின்றனர். ஆனால் இங்கு விஞ்ஞான வகுப்புகள் கூடுதலாகவும் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர்கள் குறைவாகவும் இருக்கின்றனர். இக்குறைகளை சுட்டிக்காட்டி கல்லூரி அதிபர் கல்விப்பகுதி அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

கல்லூரி மாணவர்கள் தாம் அடையும் கஷ்டத்தையும் விஞ்ஞான ஆசிரியரின் தேவையையும் வட்டுக்கோட்டை தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் அ. அமிர்தலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## பரீட்சைப் பகுதி கவனிக்குமா?

ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்கு ஆங்கிலமொழி மூலம் விஞ்ஞான பாடங்கட்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு வருகிற ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் பரீட்சைதான் இறுதிச் சந்தர்ப்பமாகக் கொடுக்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தின் பின்னர் இப் பரீட்சார்த்திகள் ஆங்கில மொழி மூலம் பரீட்சை எழுதமுடியாது, அத்துடன் பழைய பாடத்திட்டங்களில் வினாப்பத்திரங்கள் கிடைக்கவும் மாட்டாது: இதனால்அநேக மாணவர் பாதிக்கப்படுவர்.

உதாரணமாக 1964 டிசம்பரில் முதல் தடவையாக ஜி.சி.ஈ (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிய ஒருவர் அப்பரீட்சையில் சித்திபெற்றிருக்கவில்லையானால். 1965 ஆகஸ்டில் பரீட்சைக்கு இரு பாடங்களுக்கு மேல் தோற்றுவதற்கு 5 பாடங்களில் ஒரு விசேஷ சித்தியுடன் சித்திபெற்றிருக்கவேண்டுமென்ற நிபந்தனைக்கமைய ஆகஸ்ட்டில் முழுப் பாடங்களுக்கும் விண்ணப்பித்திருக்கவும் இயலாது அதே பரீட்சார்த்தி 1965 டிசம்பரில் பரீட்சைக்கு எட்டுப் பாடங்களில் தோற்றி, அவற்றில் ஐந்துபாடங்களில் மாத்திரம் சாதாரணசித்தி பெற்றிருப்பின், ஒரு விசேஷசித்தி பெறாத காரணத்தால் அவர் 1966 ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் பரீட்சையிலும் எல்லாப் பாடங்களுக்கும் தோற்ற இயலாது. அப்பரீட்சார்த்தி சித்திபெறத் தவறிய பாடங்கள் ஆங்கில மொழிமூலம் பழையபாடத்திட்டத்துக்கமைந்த விஞ்ஞான பாடங்களாயின் அப்பரீட்சார்த்தியின் நிலை எவ்வளவு பரிதாபகரமானதாக இருக்கும்? அந்தப் பரீட்சார்த்தியின் நிலை ஆகஸ்டிலே அல்லது அதன் பின்போ ஆறுவது பாடத்தை எடுத்துச் சித்தி பெறமுடியாத இக்கட்டான நிலையேயாகும். ஏனெனில் ஏற்கெனவே கூறியவாறு ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றவும், பழைய பாடத்திட்டங்களில் பரீட்சை செய்யவும் 1966 ஆகஸ்டிலேயே இறுதிச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

இத்தகைய கஷ்டங்களை நீக்குவதற்குப் பரீட்சைப் பகுதியும் பரீட்சாதிகாரியும் முன்வரவேண்டும். விஞ்ஞான பாடங்களில் பழைய பாடத் திட்டத்துக்கமைய ஆங்கில மொழி மூலம் வினாக்கள் தயாரிப்பதை மேலும் ஒன்று இரண்டு தடவைகளுக்குநீடித்தல்வேண்டும். அல்லது ஆங்கில மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளை மாத்திரம் முன்பு சித்தி பெறாதிருந்தாலும், அல்லது ஐந்து பாடங்கள் சித்திபெற்று ஒருவிசேஷ சித்தி பெறத் தவறியிருந்தாலும் ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோன்றி. அவர்களுக்குக்கிடைக்கும் இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு வழிசெய்தல் வேண்டும். ஆகஸ்ட் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இது பற்றி உடனே முடிவுசெய்யவேண்டியது கல்வித்திணைக்களமும் கல்வி அமைச்சருமே இது பற்றிக் கவனிப்பார்களா?

வி. எஸ். ராஜா

கோப்பாய்.

ஃ ஃ ஃ

## புதிய பஸ்நிலையம்

யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு தீராத பிரச்னையாக இருந்துவரும் பஸ்நிலையப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகத்தை பொறுப்பேற்றுள்ள விசேஷ மூவர் கமிஷன் நடவடிக்கை எடுத்து வருகிறதென்பதை அறிந்து மகிழ்ச்சியடைய வேண்டும். இதுவிடயமாக எனது ஆலோசனைகளையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம் பெரிய கடையில் மின்சார நிலையத்திற்குப் பின்புறமாக இருக்கும் பழைய பஸ்நிலையத்தையும், மார்க்கட்டுக்கு முன்புறமாக இருக்கும் புதியபஸ் நிலையத்தையும் ஒன்றாக இணைத்து புதிய பஸ்நிலையத்தை அமைப்பது நல்லது. புதிய பஸ்நிலையத்திற்கும், பழைய பஸ்நிலையத்திற்கும் இடையில் உள்ள மீன் மார்க்கட்டையும், இறைச்சி, கருவாட்டுக் கடைகளையும் அவ்விடத்திலிருந்து அகற்றி யாழ்ப்பாணக் கோட்டைக்குமேற்குப் புறமாக உள்ள இடத்தில் அமைப்பது பொருத்தமானதாகும். நல்ல இடவசதியும் உண்டு. யாழ்ப்பாணநகருக்கு ஒரு நவீன சந்தை அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். தற்பொழுது சந்தை இருக்குமிடம் பொதுமக்களுக்கு மிகவும் வசதியானது. எனவே தற்பொழுது உள்ள சந்தைக் கட்டிடங்கள் பூரா[illegible]றப்பட்டு அவ்வி[illegible] புதியதோர் நவீனசந்தை

(கண்டியில் உள்ள நவீன சந்தைபோல்) எல்லா வசதிகளுடனும் அமைக்கப்பட வேண்டும்.

[illegible]

யாழ்ப்பாணம்.

# 1-ம் எதிரி கத்தியால் குத்தியதும் 2-ம் எதிரிகோடரியால்வெட்டினர்'

## மந்துவில் சுடலையடி இரட்டைக்கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

முதலாம் எதிரி நாகமுத்து கிட்டினரை கிறிஸ் கத்தியால் குத்தியதும், சுப்பிரமணியம் சென்று ஏன் குத்துப்படுகிறீர்கள்?என்றுகேட்டார். உடனே முதலாம் எதிரி 'நீ ஏன்ரா அதைப் பற்றிக் கேட்கிறாய்'. என்று கிறிஸ் கத்தியால் சுப்பிரமணியத்தின் நெஞ்சில் குத்தியதும், அவர் சரிந்தார் அப்பொழுது அருகில்நின்ற இரண்டாம் எதிரி நவரத்தினம் கோடரியால் தலையில் வெட்டினார். சுப்பிரமணியம் நிலத்தில் விழுந்ததும் முதலாம் எதிரி மீண்டும் அவரின் முதுகில் கிறிஸ் கத்தியினால் குத்தினார்.

மந்துவல் சுடலையடி இரட்டைக்கொலை வழக்கில் காலஞ்சென்றவரின் சகோதரர் கணபதி இரத்தினம் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எச். டபிள்யு தம்பையா கியு, சி முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் தேதியளவில், மந்துவில் சுடலையடியில் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் ஆகியோர், கணபதி சுப்பிரமணியத்தை கொலை செய்ததாகவும், அதேஇடத்தில், அதே நேரத்தில் அதே சம்பவம் நடக்கும்போது கந்தன் சித்திரனை கொலை செய்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் திரு ஏ, சம்பந்தன். அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும், புறக்டர் திரு. எஸ் கந்தசாமியின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் திரு எஸ், அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்.

### சகோதரர் சாட்சியம்

கணபதி இரத்தினம் சாட்சியமளிக்கும் போது கூறியதாவது:-

காலஞ்சென்ற சுப்பிரமணியம் எனது சகோதரர் முதலாம், இரண்டாம் எதிரிகளை எனக்குத்தெரியும் முதலாம் எதிரி. இரண்டாம் எதிரியின் தங்கையை மணம் புரிந்தவர். சம்பவம் நடந்த தினம் சின்னம்மாவின் செத்தவீட்டிற்கு நான் சென்றிருந்தேன். பிரேதம் மந்துவில் சுடலைக்கு கொண்டு போகப்பட்டது. பிற்பகல் 2-30 மணிக்கு சுடலையில், பிரேதத்தை வைத்துவிட்டு கட்டை அடுக்கினோம். என்னுடன் காலஞ்சென்ற சித்திரன், செல்லப்பா, முதலாம் எதிரி நாகமுத்து, காலஞ்சென்ற சுப்பிரமணியம். கிட்டினன், கணபதி ஆகியோர் கட்டை அடுக்கினார்கள். சரசாலையைச் சேர்ந்த மற்றும் சிலரும் கட்டை அடுக்கினார்கள்.

### 'பெண்கள் கதைவளிப்பட்டால்'

அச்சமயம், முதலாம்எதிரி 'என்னுடைய பெண்சாதியும், உன்னுடைய பெண்சாதியும் கதைவளிப்பட்டால், நீ என்னடா கனக்கக் கதைச்சியாம்' என்று கிட்டினனைக் கேட்டார். நான் அப்படி ஒன்றும் கதைக்கவில்லையென்று கூறியபடி கிட்டினர் பின்னுக்கு 'பின்னுக்கு போனார் முதலாம் எதிரி நெருங்கிச்சென்றதும் கிட்டினர் மடத்தடிக்குப்போனார் முதலாம் எதிரி மடியில் இருந்த கிறிஸ்கத்தியை எடுத்து கிட்டினரின் தோளில் குத்தினார் அதன்பின் கிட்டினரைத்தொடர்ந்து முதலாம் எதிரியும்மடத்துக்குள் சென்றார்

எங்களுடன் கட்டைஅடுக்கிக்கொண்டிருந்த சுப்பிரமணியம் மடத்தின் வடக்கு பக்கவாசலுக்குசென்ற ஏன் குத்துப்படுகிறீர்கள்? என்று கேட்டார். முதலாம் எதிரி வெளியில்வந்து 'நீயேன்ரா அதைப்பற்றிக் கேட்கிறாய்' என்று சுப்பிரமணியத்தின் நெஞ்சில் கிறிஸ் கத்தியால் குத்தினார். சுப்பிரமணியம் பின்பக்கம் சரிந்தபொழுது 2-ம் எதிரி நவரத்தினம் கோடாரியால்தலையில்வெட்டினார். சுப்பிரமணியம்நிலத்தில் விழுந்து துடித்தார். 1-ம் எதிரி நாகமுத்து மீண்டும், அவரின் முதுகில் கிறிஸ்கத்தியால் குத்தினார். அதன்பின் 1-ம் 2-ம் எதிரிகள், மடத்திற்குத் தெற்குப் பக்கத்தால் கட்டையடுக்கிக் கொண்டிருந்த சித்திரனை துரத்திக்கொண்டு ஓடினார்கள். கிட்டினர், சித்திரனின் சகோதரன். நான் அதன்பின் கிராமசேவகர் வீடுசென்று வாக்குமூலமளித்தேன். ஒன்றரைக்கட்டைக்கு அப்பால் உள்ள கிராமசேவகர் வீட்டிற்கு நடந்து போனேன்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஏ. சம்பந்தன் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:-

சின்னம்மாவின் வீடு சரசாலைக்கும், மந்துவிலுக்கும் நடுவில் இருக்கிறது. சரசாலைக்கு புறம்பாககுடலை இருக்கிறது. 1-ம் எதிரியின் ஒரு சகோதரரைத் தெரியும். அவரை மணியம் என்று அழைப்பார்கள். சின்னம்மா எனக்குச்சொந்தமில்லை. 1-ம் எதிரி திருமணம் செய்தார்.

வழக்கறிஞர்: செத்தவீட்டில், இறந்தவர்களுடன், எதிரிகள் சந்தோஷமாக கதைத்து கொண்டிருந்ததை கண்டீரா? - இல்லை.

வழக்: கீழ் கோர்ட்டில் சாட்சியமளிக்கும் போது, இறந்தவர்களுடன், எதிரிகள் சந்தோஷமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள் என்றீரா? ஞாபகமில்லை.

வழ: அப்படியிருந்தால் உண்மையாயிருக்குமா?- ஒருவேளை இருக்கும்.

வழ: செத்தவீட்டிற்கு இறந்தவர்களும்; எதிரிகளும் ஒழுங்குகள் செய்தார்கள் என்று கீழ்கோர்ட்டில் கூறினீரா?- ஒழுங்குகள் செய்தார்கள்; கதைத்ததைக் காணவில்லை.

வழ: அவர்கள் கதைத்தார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறீரா?-ஆம்.

வழ: பிரேதம் சென்ற வழியில் கள்ளுஎடுக்கக்கூடிய இடங்கள் இருந்தது?-எனக்குத் தெரியாது.

வழ: மத்தியான வெய்யிலைப்பிற்கு யாரும் கள்ளுக்குடிக்கப் போனார்களா?- நான் காணவில்லை.

வழ; சுடலைக்கு வரும் வரை எவ்விதமான சண்டையும் இல்லை?- இல்லை.

வழ:1-ம் எதிரிக்குயாராவது வெட்டியதைக் கண்டீரா?-காணவில்லை.

நீதிய: 1-ம் எதிரிக்கு காயமிருந்ததாக டாக்டர் கூறியிருக்கிறார். பாரதூரமான வெட்டு விழுந்து, எலும்பு கூட வெட்டப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கவில்லையா?-இல்லை.

வழ: கிட்டினன் உடம்பில் 3 காயங்கள் இருந்தது தெரியும்? - அவர் ஆஸ்பத்திரியால் வந்தபின்தெரியும்.

வழ: 3 காயங்கள் எப்படி வந்தது? - ஒரு குத்துத்தான் எனக்குத் தெரியும்,

வழ: 1-ம் எதிரிக்கும், இறந்த சுப்பிரமணியத்திற்குமிடையில் மனஸ்தாபம் ஏதாவதுஇருந்ததா?இல்லை.

இன்று காலை விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

— —

## முதல் எதிரிக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யென்றும் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

1-ம் எதிரி இதற்கு முன் நீதிமன்றத்தில் குற்றப்படவில்லை யென்றும் அவருக்கு 31 வயதென்றும், எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

1-ம் எதிரிக்கு ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கும் போது முதலில் தடியால் தலையில் அடித்துவிட்டு, 2-ம் தடவையாக மண்டாவினால் வயிற்றில் குத்தியிருப்பதாயும், இது ஒரு சண்டித்தனமான செயல் என்றும் நீதியரசர் தெரிவித்தார்.

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி வட்டுக்கோட்டையில் கந்தன் மயிலன் என்பவரை, நாகன் சீமான், நாகன் தளையசிங்கம், நாகன் தம்பிப்பிள்ளை, வெள்ளையன் செல்லையா ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் எஸ். சிறிதரனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் எஸ். பாலகுமார் நியமிக்கப்பட்டிருந்தார்.

— — — — —

கொக்குவில்

## இந்துக்கல்லூரி சாரணர் விழா

கோண்டாவில், செவ்

கொக்குவில் இந்துக்கல்லூரி சாரணர் சாரணிகள் விழா நாளை புதன்கிழமை மாலை நடைபெறும் பிற்பகல் 4 மணியளவில் சாரணர் பாசறையையும், பொருட் காட்சியையும் யாழ். மாவட்ட பிரதம சாரணர் ஆணையாளர் திரு. ஜி ஜி. அரசரத்தினம் திறந்து வைப்பார். தொடர்ந்து சின்னம் சூட்டும் வைபவமும், கதம்ப நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

விழாவிற்கு இளைப்பாறிய பிரதம கௌரவ இலங்கை சாரணர் ஆணையாளர் திரு. கே. சோமசுந்தரம் தலைமை தாங்குவார்.


விற்பனைக்கு

விண்ணப்பப்படிவம்

பொலிஸ்படை விண்ணப்பப் படிவத்திற்கு 5 பத்துச்சத முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். G. A. Q. பொருளியல் மாதிரி வினா விடை 12/-. மா. புவனேந்திரன் வர்த்தக கல்விநிலையம், திருநெல்வேலி. 533


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேனில் விழா என்ற பிழா விழா

பூலோக கற்பகமே கும்பிடுகிறேன்—எங்கள்
புண்ணியத்தில் வந்த பொன்னே கும்பிடுகிறேன்
சாலோக சாயுச்சியமே கும்பிடுகிறேன்—தெய்வத்
தாருவைந்தும் நீயென்றே கும்பிடுகிறேன்
மாலோனைப் போல் நிமிர்ந்தாய் கும்பிடுகிறேன்—அட்ட
மங்கலமும் நீயென்றே கும்பிடுகிறேன்
ஆலோக மாமணியே கும்பிடுகிறேன்—நல்ல
ஆயிரம் பயன்றருவாய் கும்பிடுகிறேன்

காவிரிப்பூம் பட்டனத்தில் முன்னாள் இந்திர விழா எடுப்பது போலவும், இக்காலத்தில் 'கலை விழா, தமிழ் விழா' எடுப்பது போலவும் யாழ்ப்பாணத்தில் சித்திரை முதல் ஆடி வரை வேனில் விழா எடுப்பார்கள். 'விழா விழா' என்றும் அழைப்பர்.

இந்தக் கொண்டாட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பது 'பூலோக கற்பக தரு' எனப்படும் பனை மரம்.

பத்தன் என்ற பழங்குடித் தோன்றல் பனையை விழித்து மேற்கண்ட பாடலைப் பாடுகிறான். அவன் பாடும் முறையை புலவர் விளக்குகிறார்.

'பத்தன் தன்னுகம முறைப்படி பனைத்தெய்வத்துக்கு வணக்கஞ் செய்யப் புகுந்தான். புகுந்தவன், மருதடிப் பிள்ளையாரைத் திக்கு நோக்கிக் குட்டிக் கும்பிட்டுக் காளிமாதேவியைக் கருத்தில் வைத்துப் பார்க்கும் இடந்தோறும் நீக்கமறத் தூங்கும் பிழாக்களுக்கு நறும்புனல் தெளித்து, நாலூறு கண்ணூறு போக்கிக் கவசக் குண்டிகை தண்டுகளுடன் வந்து பனைகளில் இலச்சினை பொறிக்கும் திக்குப் பாலகர்க்குத் தக்கபடி வாயுறையுங் கையுறையும் வழங்கி ஆண்டு இயங்காமற் போக்கி, நித்திய நைமித்தியம் முடித்து, வழிபட்டு, வைதிக அடியார் குழுவைப் படிமிசையிருக்கப் பணித்துப் பனைத் தெய்வத்துக்குக் கூட்டுவழிபாடு செய்யத் தொடங்கினான், அரோ!'

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மூத்தபுதல்வரான பண்டிதர் இளமுருகனார் 'வேனில் விழா' என்றஇந்த அங்கத நூலை இயற்றியுள்ளார். அங்கதம் என்பதை ஆங்கிலத்தில் 'சற்றையர்' என்றழைப்பார்கள். ஒருவரிடம் காணப்படும் குறைபாடுகளை மறைமுகமாகவும் நகைச்சுவையோடும் எடுத்துக்காட்டி அவரைத் திருத்துவதே அங்கத இலக்கியத்தின் நோக்கமாகும். தமிழ் இலக்கியத்தில் காளமேகப் புலவரும் ஔவையாரும் அங்கதப் புலவர்களாய் விளங்கினார்கள். அவர்களுக்குப் பின் அங்கதம் பாடியவர்கள் மிக மிகக் குறைவானவர்களே.

வேனில் விழாவில் இலக்கியச் சுவையும் ஹாஸ்யச் சுவையும் நிரம்பி வழிகிறது. கல்லூரி மாணவர்கள் நிறையக் கள்ளைக் குடித்துவிட்டுப்பாடுகிறார்கள்.

போடிங் மாஸ்டரும்
காணாரே
புக்குகள் விற்றதும்
காணாரே
தாடிங் டோங் டொங்
கேளாரே
தாந்தோம் திமியெனப்
பாடீரே!
ஜாஸ்தியாகவே
எடுத்தோமே
யாவரும் டிம்மாய்ப்
போனோமே
மாஸ்டரும் ஈவினிங்
வருவாரே
ஜல்தி ஜல்தியாய்
ஓடுவமே!

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

னது' என்று கேட்டேன்.

Very Insignificant Person (மிக முக்கியமில்லாத மனிதர்) என்று கூறிவிட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

அப்பவும் வி. ஐ. பி, இப்பவும் வி. ஐ. பி. தான்.

(இன்னும் வரும்)

# ஒரு சேர்ச்சில் கதை

1940ம் ஆண்டு ஹிட்லரின் குண்டுகள் லண்டன் மாநகரத்தின்மீது பொலபொலவென்று விழுந்துகொண்டிருந்தன. பிரதம மந்திரி வின்ஸ்டன் சேர்ச்சிலும் அவருடைய யுத்த மந்திரிசபையும் லண்டனுக்குக் கீழே ஆறு ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டிருந்த 150 அறைகளுக்குள் இருந்துகொண்டே யுத்த தந்திரங்களை வகுத்துவந்தனர். இந்தப் பாதாள சுரங்கத்துக்குள் மறியல் பொந்து போன்ற ஒரு சின்ன அறைக்குள் இருந்துதான் சேர்ச்சில் புகழ்பெற்ற தமது யுத்த கால ஒலிபரப்புப் பிரசங்கங்களை நிகழ்த்தினார், திருமதி சேர்ச்சிலுக்கும் அருகில் ஒரு சின்ன அறை இருந்தது.

40 சதுர அடி அறை ஒன்றில் இரவு பத்தரை மணிக்கு ஒவ்வொரு நாளும் யுத்த மந்திரிசபை கூடும். அப்பொழுது ஆட்பலம், படைப்பலம், கப்பல்கள், உணவு எல்லாவற்றிலுமே பிரிட்டனுக்கு மிக மோசமான தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த காலம்.

சேர்ச்சில் சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவுடனே ஒவ்வொரு மந்திரியும் தனது பற்றுக்குறைகளை எடுத்துக் காட்டி 'அது வேண்டும், இது வேண்டும்' என்று பெரிய கூப்பாடுபோடுவார்கள். சேர்ச்சில் அசையமாட்டார். சுருட்டுக்குப் பின் சுருட்டாய் புகைத்துத் தள்ளிக்கொண்டே குறைச் சுருட்டுகளைக் குறி பார்க்காமல், ஆனால் குறி தவறாமல், ஒரு வாளிக்குள் எறிவார். வெளியே காவல்நிற்கும் சிப்பாய்கள் பின்னர் அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டுபோய் நல்ல விலைக்கு விற்பார்கள்.

அறையில் நீலப்புகைப்படலம் நிறைந்துவிடும். மந்திரிகள் ஒருவரோடு ஒருவர் சண்டைபோட்டு ஆர்ப்பாட்டம் செய்யவும் ஆரம்பித்துவிடுவார்கள். சேர்ச்சில் அவர்களை நோக்கிப் புன்முறுவல் செய்தபடி ஏதாவதொரு ஹாஸ்ய வெடியைப் போட்டவுடன் ஆர்ப்பாட்டம் அடங்கி அமைதியாக வேலைகள் நடக்கும்.

ஒருநாள் இப்படி கலாட்டா நடந்துகொண்டிருந்தபோது சேர்ச்சில் மேஜையை ஓங்கித் தட்டியபடி சொன்னார்: 'அதே பழைய கதை தான்! பன்றிக்குட்டிகளோ அநேகம், தாயின் முலைக்காம்புகளோ கொஞ்சம்!'

# சொர்ணரின் வர்ணனைகள்

சொர்ணர் ஐயாவுக்குப் போலிகளைக் கண்டால் பிடிக்காது. அரைகுறையாகத் தெரிந்த விஷயங்களில் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசுபவர்கள் அவரிடம் தப்பமுடியாது. முகத்தை முறிக்க நேரிடுமே என்று சற்றேனும் தயங்கமாட்டார். நெற்றிக்கு நேரே தமது அபிப்பிராயத்தை அவிழ்த்து விட்டுவிடுவார். போலி ஜம்பம் பேசுபவர்களை அவர் வள்ளிதிருமணத்தில் வரும் 'சின்னக்குட்டி அண்ணை' பாத்திரத்தின் மூலம் கேலிசெய்வார்.

சின்னக்குட்டி அண்ணை தான் வள்ளியின் சகோதரனும், காவலனுமாவான். பெரிய முட்டாள், பயங்கொள்ளி. ஆனால் எதற்கும் அஞ்சாதவன்போல நடித்து ஆட்களை வெருட்டிவிடுவான்.

நம்பிராஜன் முன்னிலையில் ஒருநாள் சில முருகபக்தர்கள் காவடி ஆட்டம் நடத்தினார்கள். கூட்டத்திலிருந்த ஒருவன் முருகன் வயப்பட்டு ஆவேசம் கொண்டு ஆடினான். இதைக்கண்ட சின்னக்குட்டிக்குக் கிலிபிடித்துவிட்டது. சொர்ணரின் விழிகள் பிதுங்கின. வாய் திறந்தது. கையிலிருந்த தடி 'வெட வெட' என்று நடுங்கியது. முழங்கால்கள் கிடுகிடுத்தன. சின்னக்குட்டியின் வாயில் முன்னொரு போதும் நுழையாத ஒரு வார்த்தை அப்பொழுது நுழைந்தது. 'முருகா' என்று வாய்விட்டுக் குழறினான்.

ஆவேச நடனம் அதிகரிக்க அதிகரிக்க சின்னக்குட்டியின் பயமும் அதிகரித்தது. ஆவேசம் வந்தவன் ஒவ்வொரு முறை 'ம்ம்ம்' என்று கோரமாக உறுமும் போதும் அவன் 'முருகா' என்று கதறினான். கடைசி 'முருகா'வுடன் கையில் இருந்த காவல் தடியும் 'தடால்' என்று கீழே விழுந்தது. அது விழுந்த சத்தமும் கிலியை அதிகரித்தது. நல்லவேளையாக அந்தச் சமயத்தில் ஆவேசக்கூத்து நின்றுவிட்டது.

உடனே சொர்ணர் கீழே விழுந்த தடியை எடுத்துச் சுழற்றிக்கொண்டு மீசையை முறுக்கியவண்ணம் 'டேய்! யாரடா அவன்? எங்கேயடா வந்தான்? விட்டேனோ பார்!' என்று துள்ளியெழுந்து வீரியம் பேசினார்.

ஃ ஃ ஃ

பெரியபதவிகளைவகிப்பவர்களைப் பொதுமக்கள் கை கட்டி வாய்புதைத்து வணங்கி மரியாதைசெய்வது மனித இயற்கை. தமது பதவிக்காகத் தான் இந்தப் 'பந்தம்' பிடித்தல் நடக்கிறதேயல்லாமல் தமக்காக அல்ல என்பதை அந்தப் 'பெரியவர்கள்' உணருவதில்லை. தங்களை 'மிக முக்கியமானமனிதர்கள்' என்று நினைத்துக் கொள்வார்கள். ஆங்கிலத்தில் இதைச் சுருக்கமாக 'வி. ஐ. பி' (VIP) என்று கூறுவதுண்டு. பதவியிலிருந்து விலகிய பின்பும் இவர்கள் தங்களை வி. ஐ. பி.க்கள் என்றே நினைத்துக் கொள்வார்கள். ஆனால் பொதுமக்கள் அவ்வாறு நினைப்பதில்லை. பதவியிலிருந்தபோது அவர்களுக்கு அளிக்கப்பட்ட மதிப்பும் கௌரவமும் இப்பொழுது மிகவும் குறைந்துவிடும்.

இந்தப் பரிதாபமான நிலையிலிருப்பவர்களை தொடர்ந்து வி. ஐ. பி. என்றே அழைக்கவேண்டும் - ஆனால் அர்த்தம் முற்றிலும் மாறுனதாயிருக்கவேண்டும். என்று சொர்ணரின் மூளை தீவிரமாக ஆலோசனைசெய்தது. 'கடைசியில் கண்டுபிடித்துவிட்டேன்' என்று என்னிடம் புரளி கலந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். 'என்

(2-ம் கலம் பார்க்க)

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

# 'உலகம் போற போக்கைப் பாரு'

ஆழி சூழ் இவ்வையகத்தில் 1964ம் வருடம் 2,12,000 கோடி சிகரெட்டுகள் உற்பத்திசெய்யப்பட்டன. அத்தனையும் புகைத்துத் தள்ளப்பட்டனவாகத்தான் இருக்கவேண்டும்.

சென்ற மாதம் வெளியான ஐ. நா. சபையின் 1965ம் வருடாந்தப் புள்ளி விவகாரப்புத்தகத்தில் மேற்கண்ட தகவல் வெளியாகியிருக்கிறது.

உலகின் மொத்த ஜனத்தொகை 320 கோடி. இது வரவரக் கூடுதலான வீதம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சீன தேசம் இதில் 69½ கோடிக்கு வகைசொல்கிறது. அடுத்து இந்தியா-47 கோடியே 10 லட்சம், சோவியத் யூனியன்-22 கோடியே 80 லட்சம், ஐக்கியஅமெரிக்கா 19கோடியே 20 லட்சம்.

ஆசியாக் கண்டம் முழுவதிலும் 178 கோடியே 30 லட்சம் மானிடர்கள் வசிக்கிறார்கள். ஆபிரிக்காவில் 30 கோடியே 30 லட்சம். வட அமெரிக்காவில் 21 கோடியே 10லட்சம். தென் அமெரிக்கா 23 கோடியே 70 லட்சம். ஐரோப்பா-44 கோடியே 10லட்சம். அவுஸ்திரேலியா நியுஸிலந்து உட்பட 'சமுத்திரேனியா"-1 கோடியே 71 லட்சம்.

சினிமா பார்ப்பதிலும் புத்தகம் வாசிப்பதிலும் சோவியத் மக்களே முன்னணியில் நிற்கிறார்கள். கார் ஓட்டுவதில் அமெரிக்கர் முன்னுக்கு நிற்கிறார்கள். பிரிட்டனில் தான் அதிகம்பேர் பத்திரிகை வாசிக்கிறார்கள்.

1964ல் பூமியைச் சுற்றிவர 18 கோடியே 25 லட்சம் தொலைபேசிகள் (டெலிபோன்கள் பூட்டப்பெற்றிருந்தன.

அந்த ஆண்டில் 5 கோடியே 16லட்சம் தொன் மீன் உலகம் முழுவதிலும் பிடிக்கப்பட்டது.

அடுத்த
**'பஞ்சாமிர்தம்'**
**21-6-1966**
செவ்வாய்

# மூளை சறுக்கும், கவனம்!

ஒரு கிராமபோன் தட்டின் வெளி விளிம்பில் ஒரு சிறு பகுதியும், நடுப்பகுதியில் ஒரு பகுதியும் ஒலிப்பதிவு செய்யப்படாமல் இருக்குமல்லவா?

12 அங்குல விட்டம்உள்ள ஒரு தட்டு நிமிடத்துக்கு 78 முறை சுற்றுகிறதென்று வைத்துக்கொள்வோம்.

வெளிவிளிம்பில் ஓர் அங்குலம் அகலமான ஒருபகுதியும், நடு மையத்தில் 4 அங்குல விட்டமான ஒருபகுதியும் ஒலிப்பதிவுசெய்யப்படாமல் இருக்கின்றன.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பகுதியில் ஓர் அங்குலத்துக்கு சராசரி 90 ஊசியோடும் வளையங்கள் இருக்கின்றன.

இத் தட்டு கிராமபோனில் சுழலும்போது ஆரம்பம்முதல் இறுதிவரை ஊசி எவ்வளவு தூரம் செல்கிறது?

மீண்டும் கவனம் இந்தக் கணக்கில் ஒரு சுளுக்கு இருக்கிறது!

ஃ ஃ ஃ

'ல் ஒ மி த் ரு ழி ர் தை த வா' — இந்த பத்து எழுத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு தமிழில் ஒரு வார்த்தை அமையுங்கள், பார்க்கலாம்! எல்லா எழுத்துக்களையும் உபயோகிக்கவேண்டும்.

(விடைகள்: அடுத்த பஞ்சாமிர்தத்தில்)

(குறாவ்ஸ்)

# நம்பிக்கை மோசடியில் 25,000 பிணை

காலி, திங்கள்

காலி மாஜிஸ்டிரேட் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் தற்பொழுது றிமாண்டிலிருக்கும் அலெக்ஸ் பெர்னாந்தோ என்பவரை நம்பிக்கை மோசடி குற்றம் சம்பந்தமாக ரூபா 25,000பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

தற்காலிக பிரஜாவுரிமை பெற்றவரான பெர்னாந்தோ என்பவர் காலியைச்சேர்ந்த ஏ எம் !சிடிக்பாய் என்பவருக்கு ரூபா 25,000 சம்பந்தமாக நம்பிக்கை மோசடி செய்திருந்தாரென்று காலி பொலிசாரினால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

சில வாரங்களுக்கு முன்னர் இரத்மலானை விமான நிலையத்தில் பெர்னாந்தோ விமானமேறுவதற்கு நின்ற சமயம்காலி பொலிஸ்இன்ஸ்பெக்டர் பி.விஜேந்திரா இவரைக் கைது செய்து மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

வழக்கு இம்மாதம் 21-ந் [illegible] எடுத்துக்கொள்ளப் படும்.

# புதிய தபால் முத்திரை

கண்டி, திங்கள்

கண்டி மாநகர சபையின் நூறுவது ஆண்டு விழாவை முன்னிட்டு புதன் கிழமை புதிய இருபத்தைந்து சத தபால் முத்திரை வெளியிடப்படும்.

# நீல இல்லம் முதலிடம்

வேலணை, திங்கள்

வேலணை மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் நீலஇல்லம் வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டிகளை தீவுப் பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் ஆரம்பித்து வைத்தார்,

இவ்விளையாட்டுப்போட்டியில் முதலாவது இடத்தை நீலஇல்லமும் இரண்டாவது இடத்தை மஞ்சள் இல்லமும் பெற்றுக் கொண்டன. திருமதி ஏ. கே. கந்தையா பரிசில்களை வழங்கினார்.

# அம்மன் உற்சவம்

நயினாதீவு, திங்கள்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 18-ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி அடுத்தமாதம் 1-ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவுடன் முடிவடையும். தேரையடுத்து தீர்த்தமும் மறுநாள் தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றங்கள் தேவையில்லை!

## வள்ளுவர் அறநெறி வழியே மக்கள் வாழ்க்கை நடத்தினால்.....

வெள்ளவத்தை, திங்கள்

''நமக்கு நீதிவழங்கவென நீதிமன்றம் எதுவும் அவசியமிராது, உயர்ந்த மதில்களைக்கொண்ட சிறைச்சாலைகள் தேவையிராது. ஏன் பொலிஸ்காரர் கூடத் தேவைப்படாது. வள்ளுவன் காட்டிய அறநெறியைப் பின்பற்றி இன்றைய மக்கள் எல்லோரும் வாழ்வார்களேயானால் இவை எதுவுமே உலகில் தேவைப்படாது'' என்று நீர்கொழும்பு இந்து மன்றம் நடத்திய வள்ளுவர் விழாவில் பேசுகையில் செல்வி நஸிமா பஸீர் குறிப்பிட்டார்.

''வள்ளுவரின் பெயரால் பலர் வியாபாரம் நடத்துகின்றுர்கள். பரிமேலழகர் முதற்கொண்டு அறிஞர் விசுவநாதம் வரையில் வள்ளுவரை உண்மையாகப் புரிந்துகொள்ளாமல் உரைகளை எழுதி விளக்க நூல்களைப் பிரசுரித்து பிசினஸ் நடாத்தும் நிலைமாறவேண்டும்.'' என்று திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வ. நடராஜா தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சண்முகநாதன் வரவேற்புரை வழங்கினுர்.

திரு. முத்துலிங்கத்தின் பாவாரம் இடம் பெற்றது.

சிறுகதை எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரையின் 'வீ' என்னும் சிறுகதைத் தொகுதியினை திரு. நா. சண்முகநாதன் அறிமுகம் செய்து வைத்துப் பேசுகையில், ''இலங்கைத் தமிழ்மக்கள் இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை ஆதரிக்க முன்வரவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

வித்துவான் வசந்தாவைத்தியநாதன், திரு. இ. சங்கர், ஜனுப் பசீர், ரஹ்மான் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

விவேகானந்த சபையாரின் அகில இலங்கை சமய பாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

'ராஜ்' நகைச்சுவை நாடகக் குழுவினரின் நாடகமும் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்றது.

## தலைவர் பதவிக்கு போட்டி?

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராம சபை புதிய தலைவர் தெரிவு இம் மாதம் 23-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மேற்படி கிராம சபை அங்கத்தவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் தலைவர்தெரிவு தினத்தை அறிவித்துள்ளார். தலைவருக்கான போட்டியில் தற்போதைய தலைவர் திரு. சு. கந்தசுவாமியும், திரு. அ. தையல்பாகரும் போட்டியிடுவார்கள் என தெரியவருகின்றது.

Lionite

லயனைட்டைப் பார்வையிடும்வரை அஸ்பெஸ்டோஸ் பொருள்களை வாங்காதீர்கள்.....

தங்கள் வேலையில் பெருமை கொள்வோரும், மிகச்சிறந்த பொருள்களையே நாடுவோரும், அதேசமயம் சரச விலையிற கண்ணுயிருபபோருமாகிய கட்டிட வினைஞர்கள், குத்தகைக்காரர்கள், கட்டிட நுட்ப ஆசாரிகள் முதலியோர் தங்கள் தேவைகளைத் தெரிவு செய்ய முன்பு லயனைட்டைப் பார்வையிடாமல் விட்டால், தங்களுக்கும் தங்கள் வாடிக் கையாளருக்கும் நியாயம் இழைத்தவர்களாகமாட்டார்கள்.

இலங்கையில் எங்கும் கிடைக்கும். "பொப்பியூலர் சிக்ஸ்" என்னும் மழை நீர் போக்கிக்கான கருவிப் பொருள்களும் 4' × 4' அளவும் 6' × 4 அளவுமான தட்டையான அஸ்பெஸ்டோஸ்ஷீட்டுகளும் எம்மால் தயாரிக்கப்படுகின்றன



லயனைட்டை உங்கள் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையோடு சிபார்சு செய்யுங்கள்

ஸ்ரீ லங்கா அஸ்பெஸ்டோஸ், ப்ரொடக்ஸ் லிமிட்டெட்,
61, ஜெட்டவன வீதி, கொழும்பு-14.
தொலை பேசி 7712

GCP

## 10 பேர் மூழ்கினர்

டாக்கா, ஜுன் 13

கிழக்குப் பாகிஸ்தானில் கடும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் பத்துப்பேர் வெள்ளத்தில் மூழ்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## கொழும்பு

### செவ்வாய் 14 - 6 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசைமெட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-15 யூனெஸ்கோ உணர்ச்சிச் சித்திரம், 7-30 பஞ்சபாணம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம், 10-00 நேயர்விருப்பம்.

## சென்னை

செய்திகள்:

(காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 7-15)

416.7 மீற்றர் (720 கி.சை)

காலை 6-00 வந்தேமாதரம்—மங்களஇசை, 6-05 பாட்டு, 6-45 துதிப்பாடல்கள், 6-55 அருள்வாக்கு, 7-00 இசைமலர் 7-30 இசை அமுதம், 8-45 வாத்திய கோஷ்டி 9-15 கதம்பம், 9-30 வயலின், 10-15 மெல்லிசை 10-30 மதுரகீதம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 பாட்டு. 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-40 வாத்தியகோஷ்டி.

மாலை 5-30 வீணை.

இரவு 6-20 திரைகானம், 6-40 பொது நோக்கு, 6-45 வருக வருக தொடர் நாடகம், 7-00 மதுரகீதம், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 பாட்டு, 8-30 நேயர்விருப்பம், 9-15 பாட்டு, 10-30 திரைகானம், 11-00 பாட்டு.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 11-55, பகல் 2-00, மாலை 6-05, இரவு 7-15.)

319.1 மீற்றர் (940 கி சை)

காலை 6-30 வந்தேமாதரம்-மங்களஇசை, 6-50 மெல்லிசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 8-15 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 பாட்டு, 1-50 குரல்இசை.

மாலை 5-00 பாட்டு, 5-30 துதிப்பாடல்கள்.

இரவு 6-20 வாத்திய கோஷ்டி 6-35 ஊர்ச்சாவடி, 6-40 பொது நோக்கு, 6-45 'வருக வருக'-தொடர் நாடகம், 7-00 மெல்லிசை, 7.30 [illegible] 8-00 [illegible] 8-30 [illegible], 8-45 இசைமாலை, 9-15 பாட்டு.

விலைக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறும்

# இலங்கையரல்லாத வர்த்தகர் நாடு கடத்தப்படுவர்

பம்பலப்பிட்டி, திங்கள்

விலைக்கட்டுப்பாடு சட்டத்தைமீறும் வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்படுவர்.

அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைப்படி விலைக்கட்டுப்பாட்டைமீறும் இலங்கையரல்லாதவரின் தற்காலிக பெர்மிட்டையோ அன்றி விசாவையோ ரத்துச் செய்யும் கேள்விக்கே இடமில்லை என்றும் அவர்கள் உடனடியாக நாடுகடத்தப்படுவர்என்றும் வெளிநாட்டுப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒவுவர் தெரிவித்தார்.

# "ஜனப்பெருக்க வேகத்தில் முன்னேற்றம் இல்லை"

## வெளி செலாவணி பெருக்கம் அவசியம் என்கிறுர் ஜே. ஆர்.

கொழும்பு, திங்கள்

நாட்டில் அபிவிருத்தி, ஜனப்பெருக்கத்தை ஈடு செய்யும் அளவுக்கு முன்னேற்ற மடையவில்லையென ராஜாங்கமந்திரி திரு.ஜே, ஆர். ஜயவர்த்தன கூறினுர்.

பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டுச் செலாவணிப் பெருக்கம் அவசியமென்றும் அவர் கூறினுர். பாவனைக்கும் அபிவிருத்திக்கும் ஒத்தவகையில் பல்லாண்டுகளாக செலவினம் சமநிலைக்கு இல்லை என்றும் அவர் கூறினுர்.

''வெளிநாட்டுச் செலாவணிநிலைமை சீர்திருந்த வேண்டும் அல்லது வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும்'' என்றுர் ராஜாங்க மந்திரி.

1970-ம் ஆண்டில் 40 சதவிகிதம் உற்பத்தி பெருகும் என எதிர்பார்ப்பதாக திரு. ஜே. ஆர். கூறினுர்.

# இடிந்துவிழும் நிலையில் 500 பாடசாலைகள்!

## உதவி வித்தியாதிபதி தகவல்

சாவகச்சேரி, திங்கள்

''சுவீகரித்த பாடசாலைகளில் பெரும் பகுதிக் கட்டிடங்கள் இடிந்து விழும் தறுவாயிலிருப்பதால் இவற்றை திருத்தி அமைக்கும் பெரும் பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. 896 பாடசாலைகளில் 500 பாடசாலைகள் இடிந்து விழும் தறுவாயிலுள்ளன. அரசாங்கத்தின் பண நிலை சீரடைந்ததும் இவை படிப்படியாகத் திருத்தியமைக்கப் படுமென்பதை உறுதியளிக்கின்றேன். ஆனல் அரசாங்கம் இவற்றைத்திருத்தும் வரை பெற்றுர் பொறுத்திராது தாமாகவே இயன்றளவு திருத்த முன்வரவேண்டும்''

இவ்வாறு வட மாநில உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் சரசாலை ஸ்ரீகணேசவித்தியாலயபெற்றேர் தின பரிசளிப்பு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பத்தில் திரு. வ. ந. நவரத்தினம் வித்தியாலய முன்றலில் கொடியேற்றிவைக்க மாணவிகள் வித்தியாலய கீதம் பாடினர்.

திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பெற்றேர் தின- பரிசளிப்பு விழாக்களை வேடிக்கை விழாக்களாகக் கொள்ளாது. பெற்றேர்களைப் பாடசாலைகளுடன் இணைத்து வைப்பவையாகவே இருக்க வேண்டும்.

வகுப்பறை கல்வியால்மட்டும் கல்வி பூரணத்துவமடையாது. பிற ஆக்க வேலைகளிலும் ஈடுபடும் ஆர்வத்தையும் ஆற்றலையும் பெற வேண்டும்.

கல்வித்துறையில் முக்கியமான மாற்றங்கள் அடிக்கடி ஏற்படும்போது மாற்றங்களை நன்கு அவதானித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை கூற பொதுமக்கள்முன் வரவேண்டும் பாராளுமன்ற உறுப்பினருக்கு, நடைமுறைக்கு வரவிருக்கும் வெள்ளையறிக்கை கிடைத்துள்ளது. இவற்றை நன்கு ஆராய்ந்து நல்ல ஆலோசனை கூற பெற்றேர் கூடிய கவனமெடுத்து எமக்குப்பக்கபலமாக நின்று ஆலோசனை கூறவேண்டும்''

பருத்தித்துறை வித்தியாதரிசி திரு. வெ. கந்தசாமியும் கூட்டத்தில் பேசினுர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## பிரியாவிடை

யாழ்ப்பாணம், திங்கள்

சுண்டிக்குழி அர்ச் ஸ்நாபகயுவானியார் கோவில் மீசாம் கட்டளைக்குரவராயிருந்து தற்போது இளவாலை மீசாமிற்கு மாறதலாகிச் சென்ற வண பிதா விவ்வியம் யேசுதாசன் ஓ எம் ஐக்கு மேற்படிகோவில் கிறிஸ்தவர்களின் சார்பில் அண்மையில் ஒரு பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது ஞானக் குரவரின் சமயசமூக சேவைகளைப் பாராட்டி பலர் சொற்பொழிவு நிகழ்த்தினர் அர்ச் டொன் பொஸ்கோ பாடசாலை மாணவ மாணவிகளின் நன்றிப்பாடல்களும் இடம்பெற்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைகளுக்கும் உஷார் உத்தரவு!

# இராணுவ வீரர்களின் ரஜாக்கள் யாவும் ரத்து

## பிரதமர் திடீர் நடவடிக்கை

— நமது நிருபர் நடராஜா —

கொழும்பு, ஞாயிறு

எந்த சமயத்திலும் எந்த நிலைமையையும் சமாளிக்க தயாராய் இருக்கவேண்டும் என்று இன்று பிரதமமந்திரி திரு. டட்லிசேனநாயகா முப்படைகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார். நாட்டில் தற்பொழுது பொதுவாக ஏற்பட்டுள்ள அமைதியின்மையின் காரணமாகவே பிரதமர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ரஜாவில் சென்றுள்ள ராணுவ, கடல், விமானப்படைகளைச் சேர்ந்த எல்லாரும் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

முப்படைத் தலைவர்களுடன் கூட்டாக செயல்படத் தயாராய் இருக்கும்படி இன்ஸ்பெக்டர்ஜெனரலும் கேட்கப்பட்டுள்ளார்.

முகாம்களுக்கு வெளியில் தங்கியிருக்கும் ராணுவ, கடல், விமானப்படை வீரர்கள் அனைவரும் முகாம்களுக்குத் திரும்பிவிடவேண்டும் என்றும் எந்த நிலைமையிலும் தம் சேவைகளைச் செய்யத் தயாராய் இருக்க வேண்டுமென்றும் பிரதமர் கூறியிருக்கிறார். முப்படைகளுக்கும் பிரதமர் விடுத்துள்ள 'உஷார் உத்தரவில் அதற்கான காரணம் நாட்டில் பொதுவாக ஏற்பட்டுள்ள அமைதியின்மை என்றுமட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதேயல்லாமல் வேறு விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை

கடந்த வாரம் விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்ட போது கொழும்பில் கொள்ளையடித்தலும், கலவரங்களும் நடக்கக்கூடுமென்று அஞ்சப்பட்டதால் கோட்டை, புறக்கோட்டை பகுதிகளில் காவல்புரிந்த பொலிசாருக்குஉதவியாக பொலிஸ் பின்னணி வீரர்களும் சேவைக்கு அழைக்கப்பட்டனர். கவசமோட்டார்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன கோட்டை, புறக்கோட்டைப் பகுதியில் இன்னும் குழப்பமான நிலைமை சீராகவில்லை. தற்பொழுது கொழும்பு வீதிகளில் 150 சப் இன்ஸ்பெக்டர்களின் தலைமையின்கீழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காவல்புரிகின்றனர்.

இன்று மலை நாட்டில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் பிரமாண்டமான வேலைநிறுத்தத்தை நடத்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துவருகின்றது. இ. தொ. காங்கிரஸ் இதில் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்திருப்பதால் ஒரே தோட்டத்தில் இருசங்கங்களும் செயல்படுமிடங்களில் தகராறுகள் ஏற்படக்கூடிய நிலை உருவாகலாம்

நாடுபூராவிலும் வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவது என்று வங்கி ஊழியர் சங்கம் செய்திருந்த முடிவை ஒத்திப்போட்டிருக்கின்றது. நாஷனல் கிரின்லன் வங்கித்தகராறு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் இன்னும் சுமுகமான முடிவு எதுவும் ஏற்படவில்லை. பேச்சுவார்த்தைகள் நாளையும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது.


### வட இலங்கை சங்கீத சபா

#### 1966 சங்கீத பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகளுக்கான மனுப்பத்திரங்கள் அனுப்புவதற்கான முடிவு திகதி இம்மாதம் 15-ல் இருந்து 22-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சி. தணிகாசலம்
தலைவர்.

497


### 429-க்கு டெலிபோன் செய்யுங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் ஜவுளி வியாபாரத்தில் மோசடிகள் நடப்பதாக, அல்லது ஜவுளி சம்பந்தமான வேறு ஏதாவது புகார் செய்வதானால் பொதுமக்கள் 429 எண்ணிற்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியிடம் புகார்களைத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.


### விளம்பரம்

### நெசவு நூல் (ரெயோன்யாண்)

உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு மாத்திரம் விற்பனைக்கு நெசவு நூல் (ரெயோன்யாண்) உண்டு. தபால் பெட்டி இல. 1199 கொழும்பு.

491


# சேலையின் அதிகபட்ச விலை 15 ரூபா 90 சதமே!

கொழும்பு, ஞாயிறு

பொதுமக்களே! ஜாக்கிரதையாய் இருங்கள். குறைந்த விலை கொடுத்து வாங்கக்கூடிய துணிவகைகளுக்கு அதிக பணம் கொடுத்து வாங்காதீர்கள்.

தனிப்பட்ட வர்த்தகர்களிடமிருந்து நீங்கள் வாங்கும் எந்தச் சேலைக்கும் 15 ரூபாய் 90 சதத்துக்கு மேல் கொடுக்கவேண்டாம். அது மணிப்புரி சேலையானாலும் சரி, அன்றி காஞ்சிபுரம் சேலையானாலும் சரி எந்தச் சேலைக்கும் அதி உச்சவிலை 15 ரூபா 90 சதமே.

பருத்திச்சேலைகளின் அதி உச்சவிலை 18 ரூபா 18 சதம் என்ற நிர்ணயித்த விலையை நேற்றிரவு வெளியாகிய வர்த்தமானி அறிவித்தல் உறுதிப்படுத்தியது. இந்த ரகத்துக்குள் சேராத சேலைகளின் விலை 11 ரூபா 65 சதமே.

ஆனாலும் கூ. மொ. வி, சேலைகளை என்ன விலையில் எப்பொழுது விற்கும் என்பது பற்றி இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை. கூ. மொ. வியிடம் தற்பொழுது 10,000 சேலைகள் கையிருப்பில் இருக்கின்றன. விலையை நிர்ணயிப்பதில் ஏற்படும் தாமதத்தினாலேயே இவை இன்னும் விற்பனைக்கு வைக்கப்படவில்லை.

ஜவுளி இறக்குமதி

# கூ. மொ. வி. ஸ்தாபனத்துக்கு ஏகபோக உரிமை

## வர்த்தக மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

ஜவுளிவகைகளை இறக்குமதி செய்யும், ஜவுளி உற்பத்திக்கான பொருட்களை உற்பத்திசெய்யவும் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்திற்குஏகபோக உரிமைவழங்கப்பட்டிருக்கின்றது இது பற்றிய அறிவித்தல் கடந்த இரவு விசேஷ வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது.

தடைசெய்யப்பட்ட ஜவுளிகளை தனிப்பட்டவர்த்தகர்கள் இறக்குமதிசெய்வதையும், இறக்குமதிசெய்யப்படும் ஜவுளிகள் வர்த்தகர்களுக்கு சமமான அளவில் கிடைப்பதற்கும் வழிசெய்யும் நோக்கத்துடனேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்திடமிருந்து ஜவுளிகள் பெற்று விற்பனை செய்யும் வர்த்தகர்கள் ஜவுளிகளைக் கூப்பன்களுக்கே விற்கவேண்டும், அத்துடன் அப்படிப் பெறும் கூப்பன் புத்தகங்களின் எண், பெயர், முகவரி ஆகியவற்றையும் பதிவு செய்யவேண்டும். கூப்பன்களை வர்த்தகர்கள் விலைக்கு வாங்குவதைத் தடுக்குமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனிக் கூப்பன் புள்ளிகளையோ, டோக்கன்களையோ ஏற்றுக் கொள்ளப்படாது. ஜவுளி உற்பத்திக்கான பொருட்களை இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையும் கூட்டுறவு ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.





எவ்வாறு

# சன்லைட்

மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர், மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

LWT/S/11X56


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி [illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org